பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

வலம்புரி

Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை (14.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 299

புலிகள் மீண்டும் யுத்தத்தைத் தொடுத்தால் சர்வதேச நாடுகளின் உதவி பெறப்படும்

பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவார்களேயானால் இலங்கையரசு சர்வதேச நாடுகளுடன் பாதுகாப்பு இணைப்பு ஒன்றை ஏறபடுத்த வேண்டிய அவசியம் உருவாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளார்.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்துசமுத்திர சுற்றுவட்டாரத்தின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில், தற்போது இடம் பெற்று வரும் சமாதான முயற்சிகளில் சர்வதேசநாடுகளின் தலையீடுகள்

(10ம் பக்கம் பார்க்க)

இந்திய அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கா இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று வருகை தரவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவின் அழைப்பின் பேரிலேயே அவர் இலங்கைக்கான விஜயத்தை மேற் கொள்கின்றார்.

இலங்கைக்கு வருகை தரும் அவர் இருநாடுகளுக்குமிடையேயான வர்த்தகத் தொடர்புகள் மற்றும் சமாதான முயற்சிகள் குறித்து ஆராயவுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

கண்காணிப்புக்குழுவின் கோரிக்கையையும் மீறி குரங்குபாஞ்சானை நோக்கி சிஹல உறுமய இன்று பேரணி

பேராபத்து நடக்கும் அபாயம்

(நமது நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குரங்குபாஞ்சான் முகாம் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் உடனடியாக வெளியேறவேண்டுமென்று கோரி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வேண்டுகோளையும் மீறி குரங்குபாஞ்சான் முகாம் நோக்கிய ஆர்ப்பாட்டப் பேரணியை சிஹல உறுமயக் கட்சி இன்று நடத்துமென்று கட்சியின் தலைவர் திலக் கருணரட்னா சூளுரைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருப்பதாக அரசு கூறிவருவதை விடுதலைப் புலிகள் விடாப்பிடியாக மறுத்துவரும் நிலையில் சிஹல உறுமயக் கட்சி வஷப்பரீட்சையாக முகாம்பகுதியை நோக்கிய ஆர்ப்பாட்டப் பேரணியை கந்தளாய்ப் பகுதியில் இருந்து இன்று ஆரம்பிக்கவுள்ளது.

தாம் நடத்தும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பாதுகாப்பு வழங்குமாறும், தமது உயிருக்கு ஏற்படப்போகும் அச்சுறுத்தல்களில் இருந்து தம்மைக் காப்பாற்றுமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் சிஹல உறுமயக்கட்சி ஏற்கனவே

(10ம் பக்கம் பார்க்க)

ஓட்டோ சாரதிகள் இன்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 11-ம் திகதி மாம்பழம் சந்தியில் இடம் பெற்ற இராணுவ பவள கவச வாகனம் -ஓட்டோ விபத்தில் விபத்துக்குரிய முழுக் குற்றமும் ஓட்டோச் சாரதி மீதே ஒருதலைப் பட்சமாகச் சுமத்தப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டதைக் கண்டித்து இன்று யாழ்.குடாநாடெங்கும் ஓட்டோச் சாரதிகள் ஒரு நாள் சேவை நிறுத்தமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்.குடா நாட்டில் இராணுவ வாகனங்களுடனான விபத்துச்

(10ம் பக்கம் பார்க்க)

மன்னாரில் நாளை பொங்குதமிழ் நிகழ்வு

நகரெங்கும் விழாக்கோலம்

(மன்னார்)

மன்னாரில் நாளை நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் றீகன் தெரிவித்துள்ளார்.

நாளை பிற்பகல் 3.30 மணியளவில் மன்னார் பஸ் நிலையம், சவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் செபஸ்

(10ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியின் முடிவுக்கு பிரதமர் ரணில் பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையைப் பெற்றமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராட்டியுள்ளார்.

நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற அமைச்சர்கள் மட்டக் கூட்டத்திலேயே பிரதமர் பாராட்டியுள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், கடந்த காலத்தில் ஜனாதிபதியால் ஆரம்பிக்

(10ம் பக்கம் பார்க்க)

சேவை நீடிப்புக் கடிதம் கிடைக்கவில்லை

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா நேற்றுடன் ஓய்வு பெற்றார் !

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா தனது 36 வருட பொலிஸ் சேவையில் இருந்து நேற்று ஓய்வு பெற்றுள்ளார்.

நேற்றுடன் அவரது சேவைக் காலம் நிறைவடைந்து மேலும் ஒரு வருடம் அவருக்கு சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். எனினும் சேவை நீடிப்புக் கடிதம் நேற்றுவரை பொலிஸ்மா அதிபருக்குக் கிடைக்காத நிலையில் அவர் நேற்றுடன் ஓய்வு பெற்றார்.

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஓய்வு பெறுவதையடுத்து நேற்றுப் பொலிஸ் நிலையத்தில் இரண்டு அணி வகுப்பு மரியாதைகள் இடம் பெற்றன.

1967ம் ஆண்டு பயிலுநர் பொலிஸ் பரிசோதகர் சேவையை ஆரம்பித்த ரி.ஈ.ஆனந்தராஜா 2001-ம் ஆண்டு இலங்கையில் 27-வது பொலிஸ்மா அதிபராக பதவியேற்றார்.

போதைப்பொருள்

(10ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக கல்வி நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் கல்விநடவடிக்கைகள் நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மூன்றாம் வருட மாணவர்க ளுக்கும் நான்காம் வருடமாணவர் களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்தே கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

இத்தற்கமைய கலைப்பீடத்தின் மூன்றாம், நான்காம் வருட மாண வர்களின் கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன.

1,2-ம் வருடமாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10-ம் திகதி ஆரம் பிக்கப்படவுள்ளன.

பல்கலைக் கழகம் மூடப்பட்ட காலத்தில் தடைப்பட்ட கல்வியைத் தொடர்வதற்கு சனி,ஞாயிறு தினங் களிலும் விரிவுரைகள் நடாத்தப்பட வுள்ளன என பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 25-ம் திகதி இரு மாணவக்குழுக்களுக்கிடையில் ஏற் பட்ட மோதலையடுத்து இப் பல் கலைக் கழகம் காலவரையின்றி மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.(தி-61)

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் சேவை மேலும் விஸ்தரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை யினை மேலும் விஸ்தரித்து கால் நடை அபிவிருத்திகளை மேம்படுத் துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை கால்நடை வைத் திய அதிகாரி அலுவலகம் மேற் கொண்டுள்ளது.

இததிட்டத்திற்கமைய செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கான அழைப்புக்களை திங்கள் முதல் சனிக்கிழமை வரை அலுவலக நேரத்தில் தொலைபேசி ஊடா கவும் ஏற்றுக்கொள்ள அலுவலகம் முன்வந்துள்ளது.

மேலும் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் ஈன்ற கன்று அல்லது ஆட்டுக்குட்டிகளின் வப ரங்களை,ஈன்ற ஏழு தினங்களுக்குள் உரிய ரசீதுகளுடன் பதிவு செய் பவர்களுக்கு ஒரு மாத வயதில் கொடுக்கப்படும் குடற்புழு நீக்க மருந்து இலவசமாக வழங்கப் படுமென்றும் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி எஸ். வசீகரன் தெரிவித்துள்ளார் (உ-52)

கண்ணீர் அஞ்சலி

கவிமாமணி மஹாவித்துவான்

பிரம்மஸ்ரீ N.வீரமணிஐயர் அவர்களின்

மறைவு கர்நாடக இசையுலகிற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நாட்டியக் கலைமணி செல்வி ஜனித்திரா சோமசுரியசிங்கம்

சிங்கம்ஸ் இல்லம் நாரஹென்பிட்டி
கொழும்பில் மேற்கு. கொழும்பு. (7672)

பத்திரிகையாளர் மீது தாக்குதல்...



பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குமா விநியோகம்

(மருதங்கேணி)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் இம்மாதம் முதலாம் திகதி முதல் ஊட்டச்சத்து நிரம்பிய போஷாக்குமா வழங் கப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி சுஜந்தன் மற்றும் சுகாதாரத் தணைக்களப் பணியாளர்கள் ஆகியோரின் ஆலோசனைகளின் பிரகாரம் இச் சத்துணவுமா தயாரிக்கப்பட்டு கியூடெக் நிறுவனத்தின் ஒத் துழைப்புடன் மேற்படி மாணவர் களுக்கு வழங்கப்பட்டு வரு கின்றது.

இத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய மாவட்டங் களுக்கும் விஸ்தரிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது (உ-35)

மீன்பிடி உபகரணங்கள்

(காரைநகர்)

பிரதேச செயலக பிரிவில் காரைநகர் மீளக்குடியமர்ந்துள்ள மீனவக் குடும்பங்களின் தொழில் திறனை அதிகரிக்கும் வகையில் யாழ்.சமூக செயற்பாட்டு மையம் மீன்பிடி உபகரணங்களை வழங்கி யுள்ளது.

சுழற்சி முறைக்கடன் அடிப் படையில் வழங்கப்பட்டுள்ள 7 இலட்ச ரூபா பெறுமதியான இவ் உபகர ணங்களை மருதபுரம் வேரப்பிட்டி, நீலங்காடு,வியாவில், பிட்டியெலலை ஆகிய 5 கிராமங்களையும் சேர்ந்த 200 பேர் பெற்றுள்ளனர் (உ-36)

சப் இன்ஸ்பெக்டருக்கு பிடிவிறாந்து

(கொழும்பு)

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவரை சித்திரவதை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை கைது செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித் துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சட் டமா அதிபர் கே.சி.கமலசபேசன் மேற்படி நீதிமன்றில் வழக்கொன் றைத் தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சப்இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கத் தவறியதை அடுத்தே பிடிவிறாந்து பிறப்பிக்கப் பட்டுள்ளது (தி-60)

உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

- இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இந்தியா முயற்சி.
- அயர்லாந்தில் இறுதித் தீர்வு.
- யாழ்.குடாவில் தொடரும் விபத்துக்கலவரம்.
- வியாசரின் பதில்கள்.
- பொன்.கணேசமூர்த்தியின்

கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(13-19 ஒக். 2003) Sankunatham

பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்துக!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட விடயம் தொடர்பாக பாரபட்சமற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சனியன்று மாலை மாம்பழம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தைத் தொடர்ந்து அங்கு படையினருக்கும் பொதுமக்களுக்கு மிடையே ஏற்பட்ட களேபரம் பற்றிய செய்தி களைச் சேகரிக்கச் சென்ற குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் மீது படையினர் கண்மூடித் தனமாக மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து, யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் நேற்று முன்தினம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக நடத்திய மறியல் போரின் முடிவில் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைமை அலுவலர் செரீனா எரிக்ஷனிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும்,

மாம்பழம் சந்தியில் இடம்பெற்ற விபத்தைத் தொடர்ந்து அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலாளர்கள் மீது படையினரும் பொலிஸாரும் திட்டமிட்டு தாக்குதலை மேற் கொண்டனர்.

இத்தாக்குதலில் எஸ்.சிவபாலன், ஆர்.சபேஸ்வரன், கே.பவன், எஸ். பார்த்தீபன் ஆகிய 4 ஊடகவியலாளர்கள், தாம் ஊடக வியலாளர்கள் என இனங்காட்டியதுடன், தகவல் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைக் காட்டியபோதும் படையினரும் பொலிஸாரும் வேண்டுமென்றே அவர்களைத் தாக்கியுள்ளனர்.

படைத்தரப்பினரும், யாழ். மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகரும் குடாநாட்டில் வன் முறைகளை நிலைநாட்ட முற்படுவது மிகுந்த கவலைக்குரிய விடயமாகும்.

பிரதமர் ரணில் ஆட்சிப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ஊடக சுதந்திரம் பேணப்படுகிறது என எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டு ஒருவார காலத்திற்குள் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே நெல்லியடி, மானிப்பாய் மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் ரணிலின் ஆட்சிக்காலத்திலேயே பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதிருக்க,

★ தமிழ்ப் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்க அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

★ யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் யாழ். குடாநாட்டு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை உடனடியாக இடமாற்றுவதற்கு அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

★ பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட விடயம் தொடர்பாக பாரபட்சமற்ற முறையில் விசாரணை களை மேற்கொள்ளவேண்டும்.

★ குடாநாட்டு மக்களின் காவலர்களாக நடுநிலையாகச் செயற்படும் பத்திரிகைகளின் பத்தி ரிகையாளர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற்கு அனைத்துத் தரப்பு பிரதிநிதிகளுட னான சந்திப்பொன்றுக்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது மேற்படி 4 கோரிக்கைகளையும் ஏற்று நடுநிலைமையாக பொறுப்புடன் செயற்பட்டு அவற்றுக்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இல்லையேல் இங்கு நீங்கள் நிலைகொண்டிருப்பதில் எந்தவித பயனும் இருக்காது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-43)

யாழ்ப்பாண மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கவச வாகனம் ஓட்டோ ஒன்றின் மீது மோதி ஏற்படுத்திய விபத்துச் சம்பவத்துக்கு பின்னர் பொதுமக்களுக்கும், படை யினருக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையினைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களையும், கைதுகளையும் தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

கடந்த சில வாரங்களாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் இராணுவ தேவை கருதிய போக்கு வரத்து வாகனங்கள் அடுத்தடுத்து அப்பாவிப் பொதுமக்கள் மீது மோதி அவர்களைக் கொல்வ தோடு கடும் காயங்களுக்கும் உள்ளாக்கி வருகின்றது. இராணுவத்தினரின் இத்தகைய கேவலமான கோழைத்தனமான செயல்களைத் தொடர்ந்து அப்பகுதியில் இராணுவத்தினரின் செயல்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கின்ற சாதாரண பொதுமக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவமும்பொலி ஸாரும் இணைந்து தாக்குதல் நடத்துவதோடு, இராணுவத்தினர் விட்ட தவறுகளையும் மூடி மறைக்க முயல்கின்றனர்.

இதன்தொடர்ச்சியாகத்தான் கடந்த சனியன்று அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில் இராணுவ வாகனத்தால் ஏற்படுத்தப்பட்ட விபத்தைத் தொடர்ந்து அச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் மீது இராணுவம் மிக திட்டமிட்ட வகையில் கண்மூடித்தனமான தாக்குதல் களை நடாத்தியுள்ளது. திட்டமிட்ட வகையில் அவ்விடத்திற்கு உடனடியாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அங்கு நின்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர்.

இத்தகைய செயல்களை இனங்கண்டு இவற்றை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் நோக்கோடு அவ்விடத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் கூட இராணுவத்தினரால் இனங்காணப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதோடு அவர்களது புகைப்பட உபகரணங்களும் பறிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத் தகைய தாக்குதலானது ஜனநாயகத்திற்கு எதிரான கடுமையாக கண்டிக்கத்தக்கதான செயற் பாடாகும்.

பத்திரிகையாளர்களை அவ்விடத்தில் அனுமதித்தால் அவர்கள் இராணுவத்தின் அடாவடித்தனங்களையும், அட்டூழியங்களையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்தி விடுவார் கள். அதனால் இராணுவத்தின் இத்தகைய சட்டத்திற்கு முரணான சமாதானத்திற்கு விரோதமான செயற்பாடுகள் அம்பலமாகிவிடும் என்பதால் பத்திரிகையாளர்கள் துரத்தித்துரத்தி தாக்கப் பட்டுள்ளார்கள்.

இதுபோன்று பத்திரிகையாளர்கள் ஸ்ரீலங்கா அரச படைகளால் தாக்கப்பட்டது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன்பும் பலதடவைகள் இராணுவத்தினரால் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவ்வாறான இராணுவத்திற்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் அரசு எடுத்ததாகத் தெரியவில்லை. இதனால் இத்தகைய தமிழ்ப் பத்திரிகையாளர் மீது இரா ணுவம் மேற்கொள்ளும் பாரதூரமான தாக்குதல்களுக்கு அரசு தலையாட்டுகிறதோ? என எண் ணத் தோன்றுகிறது.

இவ்வாறு பொதுமக்கள் மீது இராணுவத்தினர் வலிந்து தாக்குதல் நடத்தி மக்களோடு வன் முறைப் போக்கிற்கு செல்வது சமாதான நடவடிக்கைகளுக்கு சாதகமானதாக அமையாது. எனவே, இராணுவத்தினரின் அடாவடித்தனமான இத்தகைய செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் இராணுவத்திற்கு எதிராக பொதுமக்கள் கிளர்ந்து எழுந்து அதனால் சமாதான நடவடிக்கை குழப்பமடைந்து அவற்றால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவு களுக்கான முழுப்பொறுப்பினையும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரே ஏற்கவேண்டி இருக்கும் என்பதனை தமிழ்மாணவர் ஒன்றியத்தினராகிய நாங்கள் இச்சந்தர்ப்பத்தில் அரசுக்கு கூறி வைக்க விரும்புகின்றோம். அத்தோடு மேற்படி சம்பவத்தோடு தொடர்புபடுத்தி கைது செய்து சிறையில் தடுத்து வைத்திருக்கும் எம் சகமாணவர்களை உடன் விடுதலை செய்யும்படி கோருவதோடு, இவ்வாறு இல்லாத பட்சத்தில் குடாநாடு தழுவியமாணவர் போராட்டத்தை நடாத்து வது தவிர்க்கமுடியாததாகும்.

வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

யாழ். குடாநாட்டில் குவிந்திருக்கும் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளான பொலிஸ், இராணுவம் ஆகியன இணைந்து அண்மைக்காலமாக முன்னெடுத்துவரும் தகாத செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

கடந்த சில நாட்களுக்குள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் குழப்பங்களை ஏற்படுத்தும் முக மாக திட்டமிட்டு தமது வாகனங்களால் மக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களுடன் மோதி அவற்றைச் சேதப்படுத்துவதும், அதில் பயணம் செய்யும் தமிழ் மக்களைப் பலி கொள் வதும், அங்கவீனர்களாக்குவதுமான சம்பவங்கள் சாதாரணமாக நடைபெற்று வருகின்றது.

இதனால் பாதிப்பிற்குள்ளாகும் மக்கள் அதனைக் கண்டித்து எடுக்கும் நடவடிக்கை களுக்கு அச்சமூட்டும் வகையில், மிரட்டுவது போல், கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசு வதும், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் விரும்பத்தக்க செயலல்ல.

இப்படியான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களின் மீது தாக்குதல் நடாத்துவதும், அவர்களின் ஒளிப்படக் கருவி போன்றவற்றை பறிப்பதும், அடித்து நொருக்குவதும் ஒரு நாகரிகமற்ற காட்டுமிராண்டிச் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

தொடர்ந்தும் இதேபோன்ற நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் பாரதூரமான பின்விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் என எச்சரிக்கின்றோம்.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்

அரியாலைப் பகுதியில் குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் நிறுவனத்துக்கு தொலை நகல் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் செய்துள்ள இந்த முறைப்பாட்டில்,

வலம்புரி, உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளர்களும், படப்பிடிப்பாளர்களும் மீண்டும் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகியிருப்பது கண்டனத் திற்குரியது.

இவ்வாறான செயல்களை சமாதானத்தையும் நல்லுறவையும் விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிக்க வேண்டும்.

இராணுவத்தினரின் இவ்வாறான செயல்களை அனைத்துத்தரப்பினரும் ஒன்றுதிரண்டு எதிர்க்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

நேற்றைய தினம் அரியாலைப் பகுதியில் பொது மக்கள் மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் இராணுவம் மற்றும் பொலிஸார் வேண்டும் என்றே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலானது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதும், ஓர் காட்டுமிராண்டித்தனமான செயலு மாகும்.

அண்மைக்காலமாக குடாநாட்டுப் பிரதேசங்கள் எங்கும் அதிகரித்துவரும் இவ்வாறான சம்பவங்கள் சமாதானத்தைக் குழப்ப இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கையோ என்று கருத வேண்டியுள்ளது.

இது சமாதானம் விரும்பிகளின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியும் உள்ளது.

இராணுவம் வேண்டுமென்றே இவ் வாகன விபத்துக்களை ஏற்படுத்துவது போன்று தென் படுகிறது. இவ் விபத்துக்களின் பின் மிகத்திட்டமிட்ட முறையில் இராணுவத்தைக் குவித்து மக்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சும் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கை மூலம் கடந்த காலத்தில் இராணுவம் மக்களை அடக்கியாண்டதை மீண்டும் தொடர விரும்புகின்றது. இது மக்கள் சுதந்திரத்தைப் பறிக்கும் ஓர் நடவடிக்கையாகும்.

இதில் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் கடுமையான கண்டனத்திற்குரியது. புகைப்படக் கருவியைப் பறித்து பத்திரிகையாளரைத் தாக்கியது செய்தியை இருட்டடிப்புச் செய்யவே. மேலும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வாகனம் மீதான இராணுவத்தின் தாக்குதல் இராணுவம் போர்நிறுத்தத்தை எவ்வளவுதூரம் மதிக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

இனிமேலும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாது இருப்பதை போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழு உறுதி செய்ய வேண்டும். தவறின் மக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீது கொண்ட நம்பிக்கை கேள்விக்குறியாகும்.

யாழ்.மாவட்ட தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

உடன்பாட்டில் குறித்தபடி மக்கள் தமது அன்றாட வாழ்விற்குத் திரும்புவதை அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை இப்போது மீளவும் வலியுறுத்துகிறோம்.

இது ஒருபுறம் இருக்க, இப்போது எழுந்துள்ள புதிய பிரச்சினை வீதியில் படை வாகனங்களால் ஏற்படுத்தப்படும் விபத்துக்களாகும். இது உண்மையில் விபத்தா? அல்லது விபத்து போன்று தோற்றும் அமைதியைக் குழப்புவதற்கான நடவடிக்கையா? என பலரும் கேள்வி எழுப்பும் நிலையுள்ளது. வீதியில் நடமாடும்போது உயிரச்சத்தோடும் ஏக்கத்தோடும் நடமாட வேண்டியுள்ளது.

வேதனையிலும் வேதனையான விடயம் விபத்துக்களின் பின்னர் நியாயத்தைத் தட்டிக்கேட்க முற்படும் மக்களை ஏதோ கலகக்காரரை அடக்குவது போல மிலேச்சத்தனமாக தடியடிப் பிர யோகம், கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு எனத் தாக்கி அடக்க நினைப்பதானது கண்டனத்திற் குரியது. மேலும், தமிழ் மக்கள் உணர்வுகளுக்கு மதிப்பளியாது அடக்க முற்பட்டதன் விளைவே தமிழினம் தனித்து வாழமுடிவெடுக்கும் நிலைக்கு இட்டு வந்தது என்ற வரலாற்றுண்மையை அரசு புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.

மேற்குறித்தவாறான சம்பவங்களில் மாணவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப் படுவதும் எமது கல்விச் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயலாகவே கருதப் படுகிறது. குறிப்பாக மாம்பழம் சந்திப்பகுதி விபத்துக்களையடுத்து மாணவர்களைக் கைது செய்து தடுத்து வைத்திருக்கும் செயலானது வன்மையான கண்டனத்துக்குரியது. மேலும், அவர்களைத் தடுத்து வைத்திருக்காது உடன் விடுதலை செய்ய வேண்டும்.

இனிமேலும், இவ்வாறன அச்சுறுத்தல்களிலிருந்து நாம் விடுபட மனித உரிமைக்காகவும் மாணவர் கல்வி உரிமைக்காகவும் கவலை கொள்வதாகக் கூறும் மனிதநேய அமைப்புக்கள் உழைக்க முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

மீண்டும் தாக்கினால் பதிலடி தருவோம்

இஸ்ரேலுக்குச் சிரியா கடும் எச்சரிக்கை

(டமஸ்கஸ்)

சிரியாவிற்குள் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்துமானால் அந்நாட்டின் மீது பதிலடி கொடுக்கப் படும் என சிரியா ஆட்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி நடந்தது போன்று இன்னொரு தாக்குதல் நிகழுமானால் தனது தற்காப்பு உரிமையை சிரியா பயன்படுத்தும் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சக அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

சிரியாவின் ஹைபா நகரில் நிகழ்ந்த தற்கொலை மனித வெடிகுண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து, டமஸ்கஸ்ஸிற்கு அருகே பலஸ்தீனப் பயிற்சி முகாம் இருப்பதாகக் கூறி கடந்த 6ஆம் திகதி ஸ்ரேல் வான்படைத் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதலுக்கு, சிரிய எல்லைக்குள் அமைந்துள்ள ஈன்சாஹெவ் என்ற முகாமே இலக்காகியது.

இதேவேளை, காஸா நிலப்பரப்பில் இருந்து பெரும்பாலான தனது படையினரை இஸ்ரேல் வாபஸ் பெற்றுள்ளது என செய்திகள் கூறுகின்றன. (பி-2)

இந்தோனேசியாவின் பாலித் தீவில் கடந்த ஆண்டு நடந்த பயங்கர வாதிகளின் வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுச சின்னத்தின் அருகே மலர் வைத்து அஞ்சலி செலுத்தும் பெண்.

2ம் அருளப்பர் சின்னப்பரை பாப்பரசராக

திருநிலைப்படுத்திய வெள்ளிவிழா விசேட கொண்டாட்டம் ஆரம்பம்

(வார்ஸா)

பரிசுத்தப் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசராகத் திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் எதிர்வரும் 16ஆம் திகதி பூர்த்தியாகவுள்ளதை முன்னிட்டு போலந்தில் விசேட கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இந்நிலையில் போலந்து மக்களுக்காக தொலைக்காட்சி வாயிலாக உரை நிகழ்த்திய பரிசுத்தப் பாப்பரசர் தனது பாப்பரசர் பதவியின் வெள்ளிவிழாவைக் காணும் பொருட்டு அதுவரை உயிருடன் இருக்க, ஆண்டவரின் அனுக்கிரகம் தேவையெனப் பிரார்த்தித்துள்ளார்.

அத்துடன், ஆண்டவருக்கும் மக்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்த பரிசுத்தப் பாப்பரசர் உலக மக்கள் அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பார் எனவும் கூறியுள்ளார்.

கடந்த சிலகாலமாக நோய்வாய்ப் பட்டுள்ள 83 வயதான பரிசுத்தப் பாப்பரசர் 1978ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ம் திகதி பரிசுத்தப் பாப்பரசராகத் திருநிலைப் படுத்தப்பட்டார். (பி-2)

"வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்ற பழமொழியை உண்மையாக்கும் விதத்தில், போபாலில் உள்ள சிரிப்பு யோகா மையம் ஒன்று, சிரிப்பு நிகழ்ச்சியை நடத்தியது. தினசரி வாழ்வில் ஏற்படும் மன அழுத்தத்திற்கு சிரிப்பை எப்படி மருந்தாகப் பயன் படுத்துவது என்று இங்கு பயிற்றுவிக்கப் படுகிறது. சிரிப்பு யோகா மையம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் வாய்விட்டுச சிரித்து மகிழும் காட்சி.

மனநோயாளி ஒருவர் வைத்த தீயில் 30 சக நோயாளிகள் கருகி மாண்டனர்

பெலாருஸ் நாட்டின் மேற்குப் பகுதியில் சம்பவம்

(மின்ஸ்க்)

பெலாருஸ் நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள மனநோயாளர் வைத்தியசாலை ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீ விபத்தில் 30 மனநோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்துத் தெரிவித்த அந்நாட்டின் அவசர சேவைகள் அமைச்சு, மனநோயாளி ஒருவர் வைத்தியசாலைக்குத் தீ வைத்ததன் காரணமாக 30 நோளிகள் உயிருடன் எரிந்து கருகியதாகவும், வைததியசாலை அதிகாரிகள் தீயை அணைக்க தாமதமாகவே முயற்சித்ததாகவும், அவசர சேவைப் பிரிவினரை அழைப்பதில் ஏற்பட்ட தாமதமே உயிர்களைப் பலிகொண்ட தற்குக் காரணமாக அமைந்ததாகவும் கூறியுள்ளது.

வைத்தியசாலையில் தீப்பற்றி எரியத்தொடங்கி அரை மணித்தியாலயத்தின் பின்னரே அவசர சேவை பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதாக அவசர சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்குச் சென்றபோது வைத்தியசாலைக் கட்டடங்களில் ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகியிருந்ததாகக் கூறப்படுகின்றது. (பி-9)

சென்னை அம்பத்தூரில், மழை வேண்டி நீர் நிரம்பிய சிமெண்ட் தொட்டியில் நின்றபடி வருண ஜபம் செய்த வேத விற்பன்னர்கள்.

தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிரிக்கும் முயற்சி வெற்றி

(வாஷிங்டன்)

எகிப்தில் தலைகள் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் டல்லாஸ் சிறுவர் மருத்துவமனையில் 27 மணித்தியாலங்களாக 18 வைத்தியர்களால் நடத்தப்பட்ட இந்தச் சத்திர சிகிச்சை மூலம் இப்ராஹிம் இரட்டைச் சகோதரர்களான அஹமட்டும் மொஹமட்டும் பிரித்தெடுக்கப் பட்டனர்.

2 வயது நிரம்பிய இந்த இரண்டு குழந்தைகளும் தற்போது ஆரோக்கியமாக இருப்பதாக டல்லாஸ் சிறுவர் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக நிறைவேறியதை அடுத்து இரட்டைக் குழந்தைகளின் பெற்றோர் திருப்தியடைந்துள்ளதுடன், சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றிய டாக்டர்களும் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தலை ஒட்டிப் பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளைப் பிரிக்கும் முயற்சியில் சிங்கப்பூர் வைத்தியர்கள் ஈடுபட்ட போதும், சிகிச்சை பலனளிக்காது அவர்கள் இருவரும் உயிரிழந்தனர். இச்சம்பவம் உலகையே சோகத்தில் ஆழ்த்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் தற்போது எகிப்தில் தலை ஒட்டிப் பிறந்த இரட்டைச் சிறுவர்களைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட அமெரிக்க டல்லாஸ் சிறுவர் மருத்துவமனை வைத்தியர்கள் அதில் வெற்றிகண்டுள்ளமை, வைத்தியத் துறையில் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. (பி-2)

காவலர்களுக்கு லஞ்சம் கொடுத்து

ஆப்கான் சிறையில் இருந்த 41 தலிபான்கள் தப்பியோட்டம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்புற நகரான கந்தகாரில் உள்ள பிரதான சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற 41 தலிபான் சிறைக் கைதிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறைச்சாலையில் இருந்து சுரங்கப பாதையொன்றை அமைத்து அதன்மூலம் கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கைதிகள் தப்பிச் சென்றதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சிறைச்சாலைக் காவலர்களின் ஒத்துழைப்பின்றி அவர்கள் தப்பிச்சென்றிருக்க முடியாது எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தப்பிச்சென்ற ஒவ்வொருவர் சார்பில் தலா 2ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வீதம் சிறைக் காவலர்களுக்கு லஞ்சமாகக் கொடுத்ததாகத் தலிபான் குழுவின் தளபதி ஒருவர் கூறியுள்ளார்.

சிறையில் இருந்து தப்பிச்சென்ற தலிபான் போராளிகள் தாம் எதிர்பார்த்த இடங்களைச் சென்றடைந்து விட்டதாகக் குறிப்பிட்ட அவர், ஆனால் அவர்கள் எங்கே சென்றுள்ளார்கள் என்பதைக் கூற மறுத்து விட்டார்.

சிறைக் கைதிகள் தப்பிச் செல்வதற்கு முன்னதாக 62 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் முற்பணமாக சிறைக் காவலர்களுக்கு வழங்கப் பட்டதாகவும், எஞ்சிய தொகை அவர்கள் தப்பிச்சென்ற பின்னர் வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (பி-9)

விமானத்தில் அழையா விருந்தாளி

ஒரு எலி தந்த தொல்லையால் விமானப் பயணம் ஒன்று இரத்தானது. கொச்சியை அடுத்து நெடும்பசேரி சர்வதேச விமான நிலையத்தில் ரியாத் செய்வதற்கான எயார் இந்தியா ஜம்போ விமானம் புறப்படத் தயாராக இருந்த நேரம், விமானத்தில் எலி ஒனறு ஓடியதைக் கண்ட சிற்பந்திகள் அதனைப பிடிக்க நடத்திய வேட்டை யால் விமானப் பயணம் ரத்தாகியது. (பி-2)

கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

மாதிரிப் பரீட்சை – 2003

பாடம் :-கணிதம்-I **நேரம் :- 1 மணி**

ஆக்கம்:– திரு. க. ஆதித்தன் (ஆசிரியர்)

(கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை)

பகுதி I இல் முதல் பத்து வினாக்களிற்கும் 1 புள்ளி வீதமும் 11-20 வரை 2 புள்ளி வீதமும் 21-30 வரை 3 புள்ளிகளும் வழங்கப்படும்.

01. பந்து ஒன்றின் விலை ரூபா 17.50 எனின், 10 பந்துகளின் விலையைக் காண்க.
02. $4x^{-3}$ என்பதை நேர்ச்சுட்டியில் தருக.
03. P={பச்சை, மஞ்சள், வெள்ளை} எனின் தொடை P யின் முதலிமை யாது?
04. △ ABC யில் AB=BC எனின், சமமான கோணங்களைப் பெயரிடுக.



05. $x^2 + 5x$ ஐ நிறைவர்க்கமாக கூட்டவேண்டிய உறுப்பைக் காண்க.
06. 12% எளிய வட்டிப்படி ரூபா 1000 இற்கு 2 வருடத்திற்கான எளிய வட்டியைக் காண்க.
07. x இன் பெறுமானத்தைக் காண்க.



08. 0.6, $^{7}/_{10}$, $^{1}/_{2}$ இவற்றை ஏறுவரிசையில் எழுதுக.
09. $n(A) = 6$, $n(\mathcal{E}) = 15$ ஆயின் $n(A)^1$ ஐக் காண்க.
10. $2^x = 128$ எனின் x இன் பெறுமதி யாது?
11. காரணி காண்க:- $2x^2-18$
12. தீர்க்க. $^{2x}/_{5} - 4 = 2$
13. ஒழுங்கான பல்கோணியின் அகக்கோணம் ஒன்றின் பெறுமதி 135° எனின்
    (I) புறக்கோணத்தின் பெறுமதி யாது?
    (II) பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க?
14. ஒரு கூட்டல் விருத்தியின் n வது உறுப்பு (7-3n) எனின்
    (I) முதலாம் உறுப்பு யாது?
    (II) பொது வித்தியாசம் யாது?
15. y=3x+2 என்ற கோட்டிற்கு சமாந்தரமாகவும் உற்பத்திக்கூட்டாகவும் செல்லும் கோட்டின் சமன்பாட்டை எழுதுக?
16. $^{A}/_{X} = (m-n)$ இதில் mஐ ஏனைய எழுத்துக்கள் சார்பில் தருக.
17. 7cm ஆரையும் 15cm உயரமும் உடைய கூம்புவடிவ பாத்திரத்தை நீரினால் நிரப்புவதற்கு 3.5cm ஆரையும் 5cm உயரமும் உடைய கூம்பினால் எத்தனை தடவைகள் நீரூற்றவேண்டும்.
18. O வட்ட மையமாகும் Q இன் பெறுமதி யாது?



19. ஒரு செவ்வக வடிவ காணியின் பரப்பளவு 1.8 ஏயர் அதன் நீளம் 15m எனின் சுற்றளவை m இல் காண்க. (1 ஏயர் = $100m^2$)
20. 3,4,6,6,7,x ஆகிய ஈட்டுக்களின் இடை 5 ஆகும். x இன் பெறுமானத்தைக் காண்க.
21. சுருக்குக:- $\frac{1-0.775}{0.5}$
22. அருகே உள்ள உருவில் O வட்டத்தின் மையம். OM ⊥ AB, ON ⊥ CD, CN=3.5cm எனின் நாண் ABயின் நீளத்தைக் காண்க.



23. U=20, t=4, f=-10 எனின் $S = Ut + {}^{1}/_{2}\, ft^2$ இல் S இன் பெறுமதியைக் காண்க.
24. மடக்கை வாய்ப்பாட்டைப் பயன்படுத்தாது சுருக்குக.

$$Lg8 + 2Lg5 - Lg2$$

25. உருவில் AOB விட்டமாகும். O மையம் $O\hat{B}C = 25^\circ$ ஆயின்,
    1) $O\hat{C}B$ இன் பருமன்
    2) $A\hat{C}O$ இன் பருமன் என்பவற்றைக் காண்க.



26. வியாபாரி ஒருவர் தபால் அலுவலகத்தில் ரூ. 5 பெறுமதியான 100 முத்திரைகளைக் கொள்வனவு செய்து அவற்றை ரூ. 5.50 வீதம் விற்றான் எனின், இலாப சதவீதத்தைக் காண்க.
27. ஒரு மண்டபத்தின் நீளம் 30m, அகலம் 10m ஆகும். 3m அகலமுடைய நிலவிரிப்பில் எவ்வளவு நீளம் அம்மண்டபத்திற்குத் தேவை என காண்க.
28. இலங்கையின் நேரம் 0800h ஆகவுள்ளபோது, அவுஸ்திரேலிய நேரம் 1300h ஆகும். 20ஆம் திகதி சனிக்கிழமை அவுஸ்திரேலிய நேரம் 0230h ஆக இருக்கும் போது இலங்கையின் நேரத்தை திகதி, நாள் என்பவற்றுடன் தருக.
29. $a^2+b^2=36$, ab=4 எனின் $(a-b)^2$ இன் பெறுமதி காண்க.
30. A, B என்பன இரு நகரங்களாகும். Bயிலிருந்து பார்க்கும்பொழுது Aயின் திசைகோள் 220° எனின் Aயிலிருந்து பார்க்கும்போது Bயின் திசைகோள் யாது?



கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

மாதிரிப் பரீட்சை – 2003

30 ஆம் திகதி வெளியான

தமிழ் மொழியும் இலக்கியமும் - விடைகள் பகுதி - I

ஆக்கம்:– திருமதி சி. தவராசா (ஆசிரியர்)

(மல்லாகம் மகாவித்தியாலயம்)

01. யன்னல்
02. இளைப்பாறல்
03. ஆரம்பம்
04. உலோபம்
05. எதிரூன்றல்
06. தாழ்வாரத்தில்
07. காலக்கெடு
08. ஆத்திகன்
09. பணிப்புரையை
10. தான்தோன்றித்தனமான
11. புகலரண்
12. ஒப்புரவு
13. அகத்திணை
14. சுயம்பு
15. சுளை
16 விரும்பிக் கேட்டல்
17. பதற்றக்காரன்
18. மேலெழுந்தவாரியாகப் படித்தல்
19. தேய்ந்தாலும் சந்தனக் கட்டை தன் மணம் மாறாது
20. போரோ கலகமோ முடிந்தாலும் அதன் தாக்கம் இருக்கவே செய்யும்
21. எண் வழுவமைதி
22. 6ம் வேற்றுமை
23. பயனிலை மறைந்து வந்தது
24. சால
25. உயர்வு நவிற்சி அணி
26. வ
27. இடக்கரடக்கல்
28. அணி
29. குணம்
30. பாய்ந்தது
31. சுற்றுலாவிற் சென்றோம்
32. நாங்கள் ஏதோ படித்துக்கொண்டிருப்போம்
33. காண்டிருந்தான்
34. அங்கனமே இருப்பர்
35. தோன்றும் உருவம்
36. சூரியாத்தமனம்
37. சம்பவ வருணனை
38. செய்யுளின் மூன்றாம் அடி
39. சரிந்தான்
40. ஈ.அ.இ.ஆ

நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய அவசியம் அரசிற்கு ஏற்பட்டுள்ளது

பாதுகாப்புத்துறை செலவின அதிகரிப்பிற்குக் காரணம் இதுவென்கிறார் இராணுவ ஆய்வாளர்

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகவே அடுத்த ஆண்டுக் கான பாதுகாப்புத்துறை செலவினங் கள் அதிகரிப்பட்டுள்ளதென இரா ணுவ ஆய்வாளர் சிவராம் தெரி வித்துள்ளார்.

நாட்டில் தற்போது யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானச் சூழ்நிலை நிலவி வருகின்ற நிலையில் இவ் ஆண்டுக்கான பாதுகாப்புத்துறை செலவினங்களை விட அடுத்த ஆண்டுகான பாதுகாப்புத்துறை செலவினங்கள் அதிகரித்துள்ள தன் நோக்கம் பற்றி பி.பி.சி.யின் தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வி யிலேயே இதனைத் தெரிவித்துள் ளார்.

அவர் தொடர்ந்து இதுபற்றிக் கூறுகையில்,

இந்த ஆண்டுக்கான பாதுகாப் புத்துறை செலவினங்கள் 5ஆயிரத்து 38கோடி ரூபாவாகும். அடுத்த ஆண்டுக்கான முழுமையான பாது காப்புத்துறை செலவினங்கள் 5ஆயிரத்து 280 கோடி ரூபாவாகும்.

இவ்வாறு அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புத்துறை செலவினங்கள் அதிகரித்திருப்பது குறித்து பலர் அதிருப்தி அடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது. உண்மையிலேயே நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத் துவதற்காகவே பாதுகாப்பு செல வினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த காலங்களில் குறிப்பாக 2000ஆம் ஆண்டு தமி ழீழ விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத் தின் மீது படையெடுத்த போது அரசினால் சர்வதேச நாடுகளிடம் இருந்து கடனடிப்படையில் பெரு மளவு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அந்தக் கடன் இன் னும் முழுமையாக மீளளிக்கப்பட வல்லை. அத்துடன் அதற்கான வட் டியை செலுத்த வேண்டிய நிலை யும் அரசிற்கு இருக்கிறது.

இதற்கிடையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிபீடமேறிய காலம் முதல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.,சிஹல உறுமய போன்ற இனவாத சக்திகள் நாட் டின் பாதுகாப்பு பெரும் அச்சுறுத் தலுக்கு உள்ளாகி இருப்ப தாகவும் விடுதலைப்புலிகள் தற்போது ஏற பட்டுள்ள சமாதானச் சூழலை சாத கமாக்கிக்கொண்டு மீண்டும் ஓர் போரிற்கு தயாராகி வருவதாகவும் சிங்கள மக்களிடம் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இதனால் சிங்கள மக்கள் அரசு மீது கொண்டுள்ள நம்பிக்கை தற் போது வெகுவாக குறைந்து வரு கின்றது.

தற்போதைய அரசு எதற்கும் தயாராக இருக்கிறது என்பதை சிங் கள மக்களுக்கு காட்ட வேண்டிய நிலைப்பாடு அரசிற்கு ஏற்பட்டுள் ளது.

இதேவேளை, சமாதானப் பேச்சு வார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து இணைத் துக்கொள்வதற்காகவும் இந்தப் பாதுகாப்பு செலவனங்கள் அதிகரிக் கப்பட்டிருக்கலாம் என்பதும் இங்கு குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது.

இவைதவிர பொலிஸ் சேவை தற்போது மிக முக்கியமானதாகக் கருதப்படுவதால் பொலிஸாரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பொலிஸ் சேவையை விஸ்தரிக் கவும் போதியளவு நிதி தேவைப் படுகிறது.

குறிப்பாகத் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையினை அடுத்து வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. இதனைப் பேணுவ தற்கான அவசியம் அரசிற்கு இருக் கிறது.

ஏனெனில் பெருகிவரும் வெளி நாட்டு முதலீடுகளுக்கு அச்சுறுத தல்நிலை ஏற்பட்டுள்ளது. முதலாளி கள் கொலைசெய்யப்படுவது. கடத் தப்படுவது ஆகியன பரவலாக இடம் பெறுவதால் அவர்களிற்கு பாது காப்பு அளிக்கவேண்டி இருக்கிறது.

இதற்கிடையில் அரச தொழி லாளர்கள் மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள், வேலை நிறுத்தங்களையும் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பும் அரசிற்கு இருக்கிறது.

எனவே வெளிநாட்டு முதலீட் டாளர்களுக்கு ஓர் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் உள்ளகப் பாது காப்பை உறுதிப்படுத்தக் கூடிய ஓர் கட்டமைப்பு உள்ள இறுக்கமான பொலிஸ் சேவையை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது.

இதேசமயம், தற்போது அதாவது யுத்தம் நிறுத்தப்பட்ட காலத்தில் இருந்து ஆர்ப்பாட்டங்கள் கலவரங் கள் போன்ற வன்முறைச் சம்பவங் கள் அதிகரித்து வருகின்றமையி னால் அதனைக் கட்டுப்படுத்து வதற்கு தேவையான பயிற்சிகளை பொலிஸாருக்கு வழங்கவேண்டி இருக்கிறது.

அது மட்டுமன்றி தற்போதும் பொருளாதாரத்துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்து வருகின்ற நிலையில் பாதுகாப்புத் துறையை விஸ்தரிப்பது மிகவும் முக்கியமான தாகவே உள்ளது என்றார்.

(உ-62,10)

எங்குள வீரமணி ஐயாவே எங்கு சென்றீர்கள்

ஈழ மண்ணின் கலைக்காவலனே வீரமணியே
இசையுலகின் கலை மாமணியே
காலனுன்னை கவர்ந்ததாலே நீ
காதலித்து கலையுலகம் கதறுதையா
நீள நினைப்பதற்குரிய இசை வேந்தனே
நின் பிரிவிங்கே எம் நெஞ்சை சுட்டதையா
ஆளுமை மிக்க சாகித்தியங்களின் கலைஞனே
ஆற்றுப்படுத்து இங்கு இனியாருளாரையா...?

இந்தியா உன்னை புகழும் பொழுதெல்லாம்
ஈழத்து நெஞ்சமெல்லாம் மகிழுமையா
சந்ததிக்காய் நீயளித்த வேதமெலாம- ஈழ
சரித்திரத்தில் என்றுமே அழியாதையா
விந்தையாய் பிறந்த கலைகளிங்கு
வீரமணியே வீரமணியேயென விம்மி புலம்புதையா
சிந்தையில் நிறைந்து கலைகளின் ஆடலரசனே
செசந்தமிழர் தேசமுனை இழந்து தவிக்குதையா
தானளித்த இசை விருந்தை யெல்லாம்
தமிழர் நெஞ்சம் உண்டு மகிழ்ந்ததையா
கான மீசைத்து நீ பாடும் கவிதைகளால்

கட்டுண்டு போனதுதையா எங்கள் தேசம்
வானொலியில் ஒலித்த குரல் கேட்டு
வையமெலாம் வணங்கி நின்றதையா
மானமிகு தமிழ் குடிக்கு கலையாலே
மகிமைதனைச் சேர்ந்துவனே எங்கு சென்றாய!

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன

வீரமணி ஓய்ந்தது

ஒலித்த வீரமணி
ஓய்ந்தது,
சிரித்த ஞானமணி
சரிந்தது

விழித்த வெற்றிமணி
உறங்கியது
பழுத்த இசைமணி
பழுத்தது

இயலிசை நாடகமலை
இடிந்தது

குயிலிசைக் கவிமழை
மடிந்தது

இணுவில் வீரமணி
மகா கவியானது
அணுவில் வீரமணி
யுக சக்தியானது

நனவில் வீரமணி
தமிழிசையாகும்
துணிவில் வீரமணி
தூயக இசையாகும்

தமிழீழக் கவிராயர்

இன்று கவிமாமணி ந. வீரமணி ஐயாவின் பிறந்த தினம்.

வீளையாட்டுச் செய்திகள்



வேற்று மண்ணில் வெற்றிக்களிப்பு!

பாகிஸ்தானை மீண்டும் எதிர்கொள்ள தயாராகிறது தென்னாபிரிக்க அணி

பாகிஸ்தான் அணிக்கும் தென் னாபிரிக்க அணிக்கும் இடையில் பாகிஸ்தானின் ராவல் பிண்டு விளை யாட்டரங்கில் நடைபெற்ற ஐந்தா வதும் இறுதியுமான ஒருநாள் சர்வ தேச போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெற் வித்தியாசத்தில் அமோக வெற்றியீட்டியுள்ளது.

இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட் டித்தொடரினை 3:2என்ற புள்ளிகள் கணக்கில் தென்னாபிரிக்கா வெற்றி கொண்டு தொடரைக் கைப்பற்றி யுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 49.3ஓவர் முடிவில் சகல விக்கெற் றுக்களையும் இழந்து 192ஓட்டங் களை மட்டுமே பெற்றுக்கொண்டது. பாகிஸ்தான் அணிசார்பாக துடுப் பாட்டத்தில் அப்துல்ரெசாக் 38 ஓட் டங்களையும், ரஸ்சீர் கமீட் 28 ஓட் டங்களையும், ரஸ்சீவ் லத்தீப் 25 ஓட்டங்களையும் அதிக பட்சமாக தமது அணிக்காக பெற்றுக் கொடுத தனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் சோன்பெலக் 33 ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுக்களை யும், பீற்றர்ஸன், நிற்னி, நில் ஆகி யோர் தலா 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றி இருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 455 ஓவர் முடிவில் 3விக்கெற்றுக்களை மட் டும் இழந்து வெற்றி இலக்கான 193 ஓட்டங்களைப் பெற்று அமோக வெற்றி ஈட்டியது. தென்னாபிரிக்க அணி சார்பாகத் துடுப்பெடுத்தாடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான போயிற்ற டிப்பென்னர் 74 ஓட்டங் களையும் ஜக்கலிஸ் 40 ஓட்டங் களையும் பெற்றுக்கொடுத்து தமது அணியின் வெற்றிக்கு வழிசமைத் தனர்.

இதன் மூலம் வேற்று மண்ணான பாகிஸ்தானில் ஒரு நாள் போட்டித் தொடரை வென்றுள்ள தென்னா பிரிக்க அணி வெற்றிக்களிப்பில் பாகிஸ்தானுடன் டெஸ்ட் போட்டித் தொடரிலும் மோதவுள்ளது.(உ-68)

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4 ஆட்டங்களிலும் வெற்றிவாகை

(சுண்டுக்குளி)

பாடசாலை அணிகளுக்கிடை யில் நடைபெற்றுவரும் உதைபந் தாட்டப் போட்டித் தொடரில், கடந்த வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ். மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற 4 ஆட்டங்களிலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியுள் ளது.

யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி பேபி ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கிலும், 3வது பிரிவு ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக் கிலும், 2ஆவது பிரிவு ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கிலும், முத லாவது பிரிவு ஆட்டத்தில் 5:0 என்ற கோல் கணக்கிலும் பெற்று வெற்றி யைத் தனதாக்கிக் கொண்டது.

(தி-110)

நல்லூர் இளை நூல்கம் மாநகர்ச்சி மன்றம்

கலாசாரத்திற்கு சவால் விடுக்கும்

இளைஞர் குழுக்கள் குறித்து பொதுமக்கள் முறைப்பாடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கனகர் சந்திப் பகுதியில் ஒன்றுகூடும் இளைஞர் கும்பல் தொடர்ச்சியாக அப்பகுதியில் பல்வேறு கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்து அப்பகுதி மக்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படி பகுதியில் வந்து ஒன்று கூடும் இளைஞர் குழுக்கள் வாள, கத்தி, பொல்லுகள் உட்பட மற்றும் பல ஆயுதங்களை வைத்துக் கொண்டு நடமாடுவதுடன், அப் பகுதியால் செல்லும் யுவதிகளின் பின்னால் மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்று சேஷ்டை புரிந்தும் வருகின்றனர்.

அத்துடன்,கைத்தொலைபேசிகள் மூலமாகவும் பல்வேறு மிரட்டல்களையும் அப்பகுதி மக்களுக்கு விடுத்து வருவதாகவும் கலாசாரத்தைப் பேணும் குழுவிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இவ் இளைஞர் குழுக்களை விரட்டும் முயற்சிகளில் அண்மைக்காலமாகப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்ற போதிலும்,இளைஞர் குழுக்களின் செயற்பாடுகளில் எதுவித மாற்றமும் இல்லையெனவும் அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-51)

இராணுவ வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு அவற்றின் ஆவணங்கள் பரிசோதனை

முக்கிய சந்திகளில் இராணுவப் பொலிஸார் கடமை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் இராணுவ வாகன விபத்துக்களைக் குறைக்கும் வகையில், இராணுவ வாகனங்களின் ஆவணங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கையில் நேற்றையதினம் இராணுவப் பொலிஸார் ஈடுபட்டனர்.

யாழ்.நகர்ப் பகுதியின் முக்கிய சந்திகளான ஆரியகுளம் சந்தி, வேம்படிச்சந்தி ஆகியவற்றில் கடமையில் நின்றிருந்த இராணுவப் பொலிஸார், படையினரின் உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள், பிக்கப் மற்றும் மோட்டார் சைக்கிளகள் என்பவற்றை வழிமறித்து அவற்றின் ஆவணங்களைப் பரிசோதித்தமையை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் கடந்த 10 தினங்களில் இடம் பெற்ற 7விபத்துச் சம்பவங்களில் இராணுவ வாகனங்கள் தொடர்புபட்டிருந்தமையும், இவற்றுக்கெதிராக பொதுமக்கள் கிளர்ந்தெழும்போது இரு சாராருக்குமிடையே பாரிய மோதல உருவாகும் அபாயம் ஏற்படுவதுடன், மக்கள் தரப்பு இழப்புக்களைச் சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, அதிகரித்துள்ள இராணுவ வாகன விபத்துச் சமபவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழுவொன்றை யாழ்ப்பாணம் அனுபபி வைக்கவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்திருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (உ-16)

ஆளுநர் விருது பெற தெரிவான நூல்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விருது மற்றும் இலக்கியப் பரிசு வழங்கும் நிகழ்வு ஆகியன மாகாண தமிழ் இலக்கிய மாநாட்டின் இறுதி நாளான எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைபி.ப.4.00 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் மாகாணக் கல்வி பண்பாடடு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான ஆளுநர் விருது பெறுபவர்களின் பெயர்களும், விருதுகளுக்கான துறைகளும், வருமாறு:

★ கே.என். கணபதிப்பிள்ளை (சின்னமணி) -வில்லிசை.
★ செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி- பொதுச்சேவை.
★ஏ.ஜே.கனகரட்ணம்-இலக்கியம், மொழிபெயர்ப்பு.
★ கே.கணபதிப்பிள்ளை- தவில், நாடகம்.
★ ராஜுமாஸ்ரர்- சங்கீதம்.
★ சண்முகம் சிவலிங்கம்- கவிதை, சிறுகதை.
★ எம். பொன்னம்பலம்- கவிதை.
★ பளீஸ் ஏ.காரியப்பர்- படைப்பிலக்கியம.

கடந்த ஆண்டு வெளியான இலக்கியப் பரிசு பெறும் நூல்களும் நூல் ஆசிரியர்களின் பெயர்களும் வருமாறு:

★ ''பருவப் பாலியர் படும்பாடு'' (கவிதை)-க.சச்சிதானந்தன்.
★ ''பனிமழை''(மொழி பெயர்ப்பு)- அ.யேசுராசா.
★ ''மனிதத்தை தேடி...''(ஆக்கம்)- செ.மகேஸ்.
★ ''நிலாக் காலம்''(சிறுகதை)- அ.இரத்தினவேலோன்.
★ ''இனி வானம் வெளிச்சிடும்'' (நாவல்)-தமிழ்க்கனி.
★ ''எங்கள் நாடு''(நாடகம்)-அராலியூர்.ந.சுந்தரம்பிள்ளை.
★ ''நாவலர் வாழ்வும் வாக்கும்'' (ஆய்வு)- நா.சுப்பிரமணியம்.
★ நிருத்தியம் (பல்துறை) திருமதி. மீரா.மங்களேஸ்வரன்.
★ ''கருகும் பசுமை'' -எஸ்.பேராசிரியன்.
★ சித்த மருத்துவ மூலதத்துவம் (உயர் கல்வி)- டாக்டர். சே. சிவசண் முகராஜா.
★ சிறுவர் சிந்தனைக் கதைகள் (சிறுவர் இலக்கியம்)-அநு.வை. நாகராஜன். (தி-10)

கசிப்பு விற்பனையில் புதிய உத்தி

(ஏழாலை)

கசிப்பு உற்பத்தியாளர்கள் தற்போது கசிப்பு விற்பனையில் புதிய உத்தியைக் கையாண்டு வருவதாகத தெரியவருகிறது.

தெல்லிப்பழை மற்றும் அளவெடடிப் பகுதிகளில் கசிப்பு விற்பனை செய்யும் நோக்கில் ஏழாலை வடக்கு, மேற்குப் பகுதிகளூடாக கசிப்பைக் கொண்டு செல்வோர் அது வெளியில் தெரியாமல் இருப்பதற்காக வெற்றுத் தொலைக்காட்சிப் பெட்டி உட்பட வேறுபட்ட மின்சார உபகரணப் பொருட்கள் ஆகியனவற்றினுள் வைத்து எடுத்துச் செல்வதாகத் தெரியவருகிறது. (பி-90)

சுயதொழில் உதவி

(பருத்தித்துறை)

கண்பார்வை இழந்தவர்களுக்கும், அவரைப் பராமரிப்பவர்களுக்கும் சமூக நலன்புரி அமைச்சு சுயதொழில் உதவிகளை வழங்கவுள்ளது.

இது சம்பந்தமாக சமூக நலன்புரி அமைச்சில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியுள்ளனர் . (உ-52)

அகில இலங்கை மெய்கண்ட தேவர் வாரம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ள மெய்கண்டதேவர் குருபூசைத்தினத்தை முன்னிட்டு, 26ஆம் முதல் அடுத்த மாதம் 1ஆம் திகதிவரையான ஒருவாரகாலப் பகுதி அகில இலங்கை மெய்கண்டதேவர் வாரமாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளது.

இவ் ஒருவாரகாலப் பகுதியில் கல்வி நிலையங்கள், சங்கங்கள், ஆலயங்கள் முதலியவற்றில் மெய்கண்ட தேவர் குருபூசையைக் கொண்டாட வேண்டும் என வவுனியா மெய்கண்டார் ஆதீனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-8)

"திவயின" பத்திரிகையாளர் மீது கிறிஸ்தவ குழுக்கள் தாக்குதல்

(கொழும்பு)

''திவயின'' பத்திரிகையின் இரு பத்திரிகையாளர்களை கிறிஸ்தவ மதகுரு தலைமையிலான குழுவினர் தாக்கியதாக கடவத்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையின் படப்பிடிப்பாளர்களான யூ.கே.அபயரத்ன, ரட்ணசிறி ராஜபக்ஷ ஆகியோரே தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர்.

கிறிஸ்தவமத ஆராதனை ஒன்றின் போது 10 புத்தசிலைகள் சேதமாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, கிறிஸ்தவ மதகுருமாருக்கும், பௌத்தத் துறவிகளுக்கும் இடையே இடம் பெற்ற தகராற்றைப் படம்பிடிக்கச் சென்றவர்கள் மீதே நேற்று முன்தினம் காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலின் போது படப்பிடிப்பாளர்களின் புகைப்படக்கருவியும், ஒலிப்பதிவு நாடாவும் சேதமாக்கப்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (தி-60)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற முதியோர், சிறுவர் தின விழாவிலே பருத்தித்துறை சமூகசேவை உத்தியோகத்தர் எஸ். இராசலிங்கம் உரையாற்றுவதையும், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜ சுந்தரம் மற்றும் அதில் கலந்து கொண்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர் மற்றும் நிர்வாகிகளுடன் காணப்படுகின்றனர் . (படங்கள்:பரு.நிருபர்)

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கடந்த 1982ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் ஏழைககுழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு சமைத்த உணவை வழங்கி வருகின்றது. இந்த ஜீவ சேவையின் போது எடுக்கப்பட்ட படம் ஒன்று .

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட

தமிழ்த் தினப் போட்டிகளில் யாழ். மாவட்டத்திற்கு 6 தங்கப்பதக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மற்றும் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் கடந்த 9,10 ஆம் திகதிகளில் அகில இலங்கை ரீதியாக இப்போட்டிகள் நடாத்தப்பட்டன.

மேற்படி போட்டிகளில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் 6 தங்கப்பதக்கங்களையும், 4 வெள்ளிப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு:-

தங்கப்பதக்கம் பெற்றவர்களின் விபரம்

★ இசை தனி (பிரிவு -3)
ச. சுரசாகித்தியன்-சென்ஜோன்ஸ் கல்லூரி.
★ இசை தனி (பிரிவு -5)
ம.தயாபரன்- யாழ். மத்திய கல்லூரி.
★ நடனம் தனி (பிரிவு -4)
கு.மயூரி -வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை.
★ நடனம் தனி (பிரிவு -5)
பி.எலிசபெத் சுபத்திரா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ நாட்டிய நடனம் குழு - இராமநாதன கல்லூரி.
★ வில்லுப்பாட்டு குழு-வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி.

வெள்ளிப்பதக்கம் பெற்றவர்களின் விபரம்

★ தமிழியற் கட்டுரை
தி .காயத்திரி- தெல்லிப்பழை மகாஜானாக் கல்லூரி.
★ பாவோதல் போட்டி (பிரிவு-2)
ம.துளசி-வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
★ பாவோதல் போட்டி (பிரிவு-5)
தே.தைசிகா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
★ குழுஇசை (பிரிவு-2)
சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

வெண்கலப்பதக்கம் பெற்றவர் விபரம்

★ நடனம்தனி (பிரிவு-2)
தே.விதுசன்-கொக்குவில் இந்துக் கல்லூரி. (தி-18)

பணியாளர் தேவை

யாழ்.மாநகர சபை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சிற்றுண்டிச்சாலைக்கு பற்றுச்சிட்டை எழுத, தேநீர், உணவுவகைகள் தயாரிக்க, பரிமாறக் கூடியவர்கள் தேவை.

விண்ணப்பம் 20.10.2003 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி.

செயலாளர்
சி.க.உ.கூ.சங்கம்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(7714)

இன்றைய சிந்தனை

முயற்சி

நமது வேலையில் சிரமமான வேலை என்று எதுவுமே கிடையாது. அதற்கு காலம், கருவி என்ற இரண்டும் முக்கியம்.

ஒரு நாள் காலை வேளையில் தெருப்பக்கமாக ஒரு நாய் ஒரு வீட்டிற்குச் சென்றது. அங்கு உணவு ஒன்றும் கிடைக்கவில்லை. பக்கத்து வீட்டிற்குச் சென்றது. அங்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. இப்படி அனேகமான வீடுகளுக்கும் சென்றது. ஒரு வீட்டிலும் ஒன்றுமே கிடைக்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பின் ஒரு பசு மாடு அங்கு வந்தது. ஒரு பெண்மணி அந்தப் பசுமாட்டிற்கு உணவு கொடுத்தார். அங்குள்ள 3 வீடுகளுக்கு அப்பால் உள்ள வீட்டுப் பெண்மணியும் உணவளித்தார். இப்படி ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்றது. ஒவ்வொரு வீட்டுப் பெண்களும் அதற்கு ஏதாவது கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

இதுபோல் இன்னுமொரு நிகழ்ச்சி. இது உங்கள் அனைவருக்குமே தெரிந்த ஓர் நிகழ்ச்சி. திருக்கழுக்குன்றம் எனும் இடத்திற்குக் கழுகுகள் ஒரு குறித்த நேரத்திற்கு வரும். குருக்கள் படையல் வைத்திருப்பார். எல்லாக் கழுகுகளும் அந்தப் படையலை சாப்பிட்டு விட்டுச் செல்லும்.

இதை நினைத்துப் பார்க்கும் போது நாமும் ஏன் இக்கழுகுகளைப்போல, பசுவைப்போல இருக்கக்கூடாது? ஐந்து அறிவு கொண்ட மிருகங்களும் கூட இந்த நேரத்தில் இந்த வேலையைச் செய்தால் தனக்கு அதிக பயன்கிடைக்கும் என்று நினைக்கின்றனவா? இல்லையா?

இவற்றினைப்போல நாமும் இந்த நேரத்தில் இந்த வேலையைத்தான் செய்வது என்று திட்டம் போட்டால் என்ன? என்று எண்ணத் தேன்றுகின்றதல்லவா?

நம் எல்லோரிடமும் நாட் குறிப்பு உள்ளது. எல்லோரிடமும் கடிகாரம் உள்ளது. எல்லோரும் நேர அட்டவணை தயாரித்துத்தான் தமது வேலைகளையும் செய்கின்றனர். ஆனால் நாட்குறிப்பு, கடிகாரம், நேர அட்டவணை, கணனி எல்லாமே வெறும் கருவிகள் தான் அவை தாமாகவே இயல்பாகவே வேலையைச் செய்யாது. நாம் தான் எமது வேலைகளைச் செய்யவேண்டும்.

எனது நெருங்கிய நண்பர் ஒரு சம்பவத்தைக் கூறினார். அவரது அண்ணன் ஒருநாள் இவரிடம் கூறினாராம் பரமபித சோபானர் படம் ஒன்று உள்ளது என்றாராம். அப்படி என்றால் என்னவென்று கேட்டாராம் இவர். அதாவது அந்தப் படத்தில் பாம்பில் சென்றால் கீழே போவாய், ஏணியில் சென்றால் மேலே வருவாய் என்றாராம்.

உடனே இவருக்கு அதைச்செய்து பார்க்கவேண்டும் என்று ஆசை பிறந்து விட்டதாம். பக்கத்தில் இருந்த கடைக்கு ஓடிச்சென்றார். அங்கு போய் கடைக்காரரிடம் இப்படியோர் படம் உண்டா என்று கேட்டாராம் கடைக் காரரும் இருக்கின்றது என்று கூறவே அதை வாங்கிக் கொண்டு ஓடி வந்தார். மாடிக்குச் சென்றார் விளையாடிப் பார்த்தார். பாம்பின் சென்றார் கீழே போகவில்லை. ஏணியில் சென்றார் மேலே செல்லவில்லை. உடனே இந்தப் படத்தை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றார்.

அந்தக் கடைக்குச் சென்று கடைக்காரரைப் பார்த்துக் கூறினார். ''இது வேலை செய்யவில்லை வேறு தாருங்கள் என்றார். கடைக்காரர் கேட்டார் ஏன் வேலை செய்யவில்லை என்று. இவர் அவரின் முன் அந்தப் படத்தைப் போட்டுக்காட்டினார். பாம்பு கீழே வரவில்லை. ஏணி மேலே செல்லவில்லை. அதனால் இது சரியில்லை'' என்றார். அப்போது கடைக்காரர் கூறினார். ''தம்பி! நீ தான் மேலே போகவேண்டும். நீதான் கீழே வரவேண்டும். தானாக எதுவும் நடைபெறாது, செய்யாது என்றார்.

அதுபோல் தான் கடிகாரம் கட்டியிருப்பதனால் மட்டும் உரிய நேரத்திற்கு அலுவலகத்திற்கு வரமாட்டோம். நேர அட்டவனை இருப்பதனால் மட்டும் உரிய நேரத்தில் உரிய செயலைச் செய்து விடமாட்டோம். கணனி இருப்பதனால் மட்டும் வேலையைக் கற்க மாட்டோம் ''கருவி காலம் இடற்றால் செயின் அருவினை என்ற உழவோ''

என்.டி.ஸ்ரீதரன்

கிழக்காசிய மாநாட்டில் ஜனாதிபதி இன்று உரை

(கொழும்பு)

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் கிழக்காசிய பொருளாதார மாநாட்டில் இறுதி நாளான இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றவுள்ளார்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கடந்த சனிக்கிழமை கொழும்பில் இருந்து அவர் பயணமானார்.

ஜனாதிபதி தனது உரையில் பிராந்தியப் பொருளாதாரம், நாடுகளுக்கிடையிலான பொருளாதார உடன்படிக்கைகள், சமாதானம் என்பன பற்றிப் பேசவுள்ளார்.

அத்துடன், சிங்கப்பூர் ஜனாதிபதி எஸ். ஆர். நாதன், பிரதமர் ஹொசக்கோண், அமைச்சர் லிக்வான்யூ ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். (தி-60)

இடைக்கால நிர்வாகத்தை ஏற்று தமிழர்களின் இடர்களைய வேண்டும்

வடமாகாண அதிபர்கள் பிரபாவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

அதிகாரங்களையுடைய இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படின், தமிழர் பிரச்சினை மாத்திரமன்றி, இலங்கை இனப்பிரச்சினையும் தீர்ந்து முழு நாடும் சுபீட்சமடையும் என்பதில் ஐயமில்லை.

எனவே, தமிழர்களது இயல்பு வாழ்க்கையினையும் உரிமைகளையும் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தங்களது முயற்சிகளை முன்னெடுக்குமாறு பெருத்த எதிர்பார்ப்புகளுடன் தங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கம், தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத்தலைவர் வே. பிரபாகரனுக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி , பிரதமர் மற்றும் நோர்வே, கனடா,அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா, இந்தியா ஆகியவற்றின் இலங்கைக்கான தூதுவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில்,

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்கள் சொல்லில் வடிக்க முடியாதவை. இலங்கை, ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து சுதந்திர மடைந்த காலம் தொட்டு தமிழ் மக்களுடைய உரிமைகள் ஒடுக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்த வரலாறு யாவரும் அறிந்ததே. அதிகார மோகத்துடன் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகள் எவ்வாறான தமது மாறுபட்ட பொருளாதார கொள்கைகளைப் பின்பற்றிய போதிலும், தமிழர்களது உரிமைகளை மறுப்பதிலும் அவர்களது நியாயமான போராட்டங்களை ஒடுக்குவதிலும் ஒத்த கருத்துடன் காரியங்களாற்றியமை வரலாற்று உண்மையாகும்.

மாறி மாறி ஆட்சியிலிருந்த அரசுகளால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.அவர்களது நியாயமான போராட்டங்கள் வலிமைப்படுத்தப்பட்டு அநீதி இழைக்கப்பட்டது. தமிழர் உரிமைகளை வென்றெடுப்போம் என வீர முழக்கமிட்டு புறப்பட்ட, அனுபவமும் திறனும் மிக்கோர்களாகக் கருதப்பட்ட தமிழ்த் தலைவர்கள் எல்லாம் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டார்கள்.

ஆயிரமாயிரம் இளைஞர்களதும், யுவதிகளதும் வீரத்தியாகங்களாலும் மக்களது போராட்டங்களாலும் இப்போது எமது நியாயமான உரிமைகள் இலங்கை அரசாலும், உலக நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழ் மக்கள் இதற்காகக் கொடுத்த விலை மிகவும் அதிகமாகும். பல்வேறு இனக்கலவரங்கள், உயிரிழப்புக்கள், இடப்பெயர்வுகள், சொத்திழப்புக்கள்,மானபங்கங்கள், கௌரவக்குறைவுகள் என மிக மிக அதிகமான துன்பங்களைச் சுமந்துள்ளோம். இவ்வளவு இழப்புக்கள், தியாகங்களின் பின்னரும் எமது மக்கள் சொந்த இடங்களில் சுதந்திரமாக குடியமர முடியவில்லை. இராணுவக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் நீங்கவில்லை. பொருளாராத சுதந்திரமில்லை, நிர்வாகப் பரவலாக்கமில்லை, எங்களது செயற்பாடுகளை நாமே தீர்மானிக்கும் வழிவகையில்லை. இவை மிகவும் வேதனைக்குரிய ஏமாற்றமளிக்கும் விடயங்களாகும்.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களை தமிழ் மக்கள் மிக்க எதிர்பார்ப்புடன் நுணுக்கமாக அவதானித்து வருகின்றனர். தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் அனுபவித்துவரும் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய விதத்திலான அதிகாரங்களுடன் கூடிய தான இடைக்கால நிர்வாக சபை ஒன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் அமைக்கப்பட்டால் மாத்திரமே இனப்பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியும். அல்லாவிடில் தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டு தமது இருப்பிற்கான தகுதியையும் இழக்க நேரிடும். வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது தமிழ் மக்களது உரிமைகளுக்காகப் போராடும் தங்களது கடமையாகும். எனவே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் குறைந்த பட்சம் பின்வரும் அதிகாரங்களையுடைய இடைக்கால நிர்வாக அலகு ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்கு தங்களது அனைத்து முன் முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு வடமாகாண அதிபர்கள் சங்கத்தினராகிய நாம் வேண்டிக்கொள்கினறோம்.

★ வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் காணி மற்றும் மக்கள் மீள் குடியமர்தல் அதிகாரம்.
★ வடக்கு-கிழக்கின் பொருளாதாரத்தினை மீள் கட்டமைப்புச் செய்வதற்கான நிதி நிர்வாக அதிகாரம்.
★ வடக்கு-கிழக்கில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கக் கூடியதான காவல் துறை(பொலிஸ்) அதிகாரம்.
★ நிர்வாகக் கட்டமைப்பை பேணுவதற்கான உள்ளூராட்சி(நிர்வாகம்) அதிகாரம்.
★சமூகக்கட்டுப்பாட்டைப் பேணுவதற்கான நீதி அதிகாரம் ஆகிய அதிகாரங்கள் மிக்க இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (உ)

இராசி பலன்

14.10. 2003
(புரட்டாதி 27, செவ்வாய்)
சதுர்த்தி - மு.இ. 8.42 வரை
கார்த்திகை - மு.ப. 11.36 வரை
இராகுகாலம் - 3.02 -4.32
சுபநேரம் - 10.32 - 12.02
சங்கடகர சதுர்த்தி விரதம்

மேடம்
தொழில்கஷ்டம், சிந்தனை மிகுதி, கௌரவக்குறைவு, கடும்வார்த்தை.

இடபம்
நண்பர்கள் உதவி, புதிய தொழில் சேர்க்கை, தொழில் முயற்சி, தெய்வசிந்தை

மிதுனம்
பண விரயம், அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், பிரயாணம்.

கடகம்
நினைத்தகாரியம் கைகூடும், விருந்து பசாரம், தனலாபம், தொழில் நன்மை.

சிங்கம்
நல்ல செய்தி, காரிய அனுகூலம், கீர்த்தி, கடின உழைப்பு.

கன்னி
மனச் சஞ்சலம், உடல் நலக்குறைவு, புதிய திட்டமிடல், காரியதாமதம்.

துலாம்
வாகன பயம், நண்பர்கள் வெறுப்பு, முயற்சி தாமதம், பிறருக்கு உதவுதல்.

விருச்சிகம்
பிரயாண சுகம், உடல் நலம், தொழில் விருத்தி, குடும்பசுகம்.

தனுசு
மனமகிழ்ச்சி, புதிய திட்டமிடல், சத்துரு ஜெயம், காரியசிந்தை.

மகரம்
காரிய இடையூறு, வியாபார நன்மை, அமைதிக்குறைவு, சொத்துக்களால் கவலை.

கும்பம்
அற்பர் நேசம், திடீர் பயணம், மனச் சோர்வு, காரிய தாமதம்.

மீனம்
முயற்சி கைகூடும், தனவரவு, அந்நியர் சந்திப்பு பொருள் சேர்க்கை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

அலுவலகத்தில் இருந்து கடமையைச் செய்யுமாறு

சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலர் அறிவுறுத்தல்

(நவக்கிரி)

வலி-கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து சமூர்த்தி உத்தியோகத்தர்களும் தமக்குரிய அலுவலகங்களைத் திறந்து அங்கிருந்தே தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என கோப்பாய் பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டமொன்றிலேயே பிரதேச செயலர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

சமூர்த்தி உத்தியோகத்தர்களையும், சமூர்த்தி அலுவலகத்தையும் மக்கள் இலகுவில் இனங்கண்டு தமது தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அந்தந்தப் பகுதிகளில் அலுவலகங்கள் அமைக்கப்படவேண்டும்.

அத்துடன், அலுவலகத்திற்கு முன்பாக விபரமான பெயர்ப்பலகையும் அமைத்து வைக்கப்படல் வேண்டும். இதனால், மக்கள் இலகுவாக அவற்றை அடையாளம காணமுடியும் எனத் தெரிவித்துள்ளார். (உ-233)

சொத்துக்களைப் பாதுகாக்குமாறு

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆணையாளர் சுற்றறிக்கை

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மகாணத்தில் உள்ள கசல உளளூராட்சி மன்றங்களிலும் உள்ள அசையும், அசையாச் சொத்துக்களை மிகக் கவனத்துடன் பாராமரிக்குமாறும், இது தொடர்பான சகல ஆவணங்களும் ஒழுங்காகப் பேணப்பட வேண்டும் எனவும் தெரிவித்து வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடந்தகால யுத்தங்களின் காரணமாகப் பல சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. மேலும், பல சொத்துக்கள் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்திட்டங்கள் அநேகமான உளளூராட்சி மன்றங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன், வீதிகள், பாலங்கள் மற்றும் மதகுகள் என்பவற்றைப் புனரமைப்பதற்கும் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, திட்டமிட்ட முறையில் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் இந்நிதிகள் கையாளப்பட வேண்டும்.

அத்துடன், முன்மொழிவுகள் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் செயற்பாடு, செலவு விபரங்கள், நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் பிரதேசத்தின் அபிவி ருத்தி ஆகியன தொடர்பான அறிக்கைகள் யாவும்அனுப்பிவைக்க வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் தொவிக்கப்பட்டுள்ளது. (பி-252)

வினைபகை என்றிரண்டின் எச்சம்
நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்
– குறள்

வலம்புரி

சாஜஹான் கொடுத்த பரிசாக...

சாஜஹான் மன்னன் தன் காதலி மும்தாஜுக்காக தாஜ் மஹாலைக் கட்டுவித்தான். காதலியின் பெருமையை உலகறியச் செய்வதற்காக சாஜஹான் கட்டுவித்த தாஜ்மஹால் உலகப் புகழ்பெற்று விளங்குகிறது. எனினும் தாஜ்மஹாலைக் கட்டுவித்த சிற்பிக்கு மன்னன சாஜஹான் கொடுத்த பரிசை யாருமே எண்ணிப் பார்ப்பதில்லை. அதற்குள் இருக்கும் கொடூரம் ஏனோ மறைந்து விட்டது.

ஆம், தாஜ்மஹாலைக் கட்டுவித்த சிற்பி, மன்னன் சாஜஹானின் அரண்மனை நோக்கி அழைத்து வரப்படுகிறான். மக்கள் அவனை வரவேற்கின்றனர். மன்னன் சாஜஹான் சிற்பிக்குக் கொடுக்கப் போகின்ற வெகுமதியை ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சாஜஹான் மன்னன் வீறுநடையோடு வருகின்றான். அரண்மனை வாசலில் சிற்பியை வரவேற்று விட்டு, தன்உறைவாளை எடுத்து சிற்பியின் இரண்டு கரங்களையும் ஒரேவெட்டாக வெட்டித் துண்டாக்கிவிடுகின்றான். அந்தோ!பரிதாபம்.தாஜ் மஹாலைக் கட்டுவித்த சிற்பி தனது இரண்டு கரங்களையும் இழந்து மண்ணில் விழுந்து புலம்புகின்றான். இந்தக் கொடூரம் மறைந்து போகின்றது. தாஜ்மஹால் மட்டும் புகழ்பெற்றுநிற்கின்றது.

தாஜ்மஹாலைக் கட்டிய சிற்பிக்கு நடந்த அதேநிலை தான் சிங்கள ஆட்சியில் தமிழர்களுக்கு நடந்து முடிகிறது. இதற்கு உதாரணங்கள் பலஇருந்தபோதிலும், பொலிஸ்மா அதிபர்ரி.ஈ.ஆனந்த ராஜாவுக்கு சிங்கள இனவாதம் வழங்கிய சன்மானம் மிகப் பொருத்தமான உதாரணமாகும்.

சிங்கள அரசில் பொலிஸ் உத்தியோகத்தராகச் சேர்ந்த ஆனந்தராஜா தனது முயற்சியினால் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். தமிழர் ஒருவர்பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெறுகிறார் எனில் அ.்.து தமிழ்-சிங்கள பேதமையற்ற ஆட்சியில் நடந்த நிகழ்வன்று. மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் எதை நினைத்தார்களோ அதனை ஆனந்தராஜா செய்து முடித்ததனாலேயே பொலிஸ்மா அதிபர் பதவியை அவரால் எட்டமுடிந்தது.

இதற்காக அவர் எத்தனையோ அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து மீளாக்காவலில் போட்டிருப்பார். பொலிஸாரின் கெடுபிடிகளுக்குத் தலையசைத்து தமிழினத்துக்குப் பங்கம் விளைவித்திருப்பார்.

ஆனால், இன்று அவர் ஓய்வு பெறுகின்றபோது சிங்கள இனம் அவருக்குக் கொடுத்த பரிசு என்ன தெரியுமா? அதோ சாஜஹான் சிற்பிக்குக் கொடுத்த பரிசாக.. இதுவும் அமைந்து விட்டது. தமிழா போதுமா உனக்கு இது.

சிறுவர்களுக்கு ஏற்படும் நீரிழிவு நோயின் தாக்கங்களை அறிந்து தடுக்க முயல்வோம்

இளம் வயதினரை சர்க்கரை நோய் பரவலாகத்தக்குகிறது. நூறு சர்க்கரை நோயாளர்களுள் இருபது வயதுக்குட்பட்டவர்கள் ஒருவர் முதல் நான்கு பேர்வரை இந்நோயால் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

காரணங்கள்

சிறுவர்களிடையே நீரிழிவு வருவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் பெற்றோர்கள் அதில் குழப்பம் அடைய வேண்டாம். ஏனெனில் குழந்தைகளின் நீரிழிவுக்கு இதுதான் காரணம் என திட்டவட்டமாகக் கூற இயலவில்லை.

அறிகுறிகள

நீரிழிவால் பாதிக்கப்பட்ட குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாக சிறு நீர்கழிக்கும். அதிக தண்ணீர் குடிக்கும். அதாவது தாகம் அதிகமிருக்கும். பசி அதிகம் இருக்கும். அதிகம் சாப்பிட்டும் உடல் எடை வேகமாகக் குறையும. இவைகளை அலட்சியப்படுத்தினால் 48மணி நேரத்திற்குள் குழந்தை நினைவிழநத நிலைக்குச் சென்றுவிடும். அவ்வாறு சென்றால் கூட இரு நாட்களுக்கு முன்பு இது போன்ற தொந்தரவுகள் இருந்திருந்தால் சிகிச்சை அழிக்கும் மருத்திவரிடம் கூற வேணடும். அவ்வாறு கூறவில்லை எனில் மூளைக் காய்ச்சல் என நினைத்து சிகிச்சை அளிக்க நேரிடுகிறது.

நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது குறைந்தது ஒரு முறையாவது சர்க்கரையின் அளவை இரத்தத்திலும், சிறு நீரிலும் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

சிகிச்சை

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகம் இருந்தால் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து நினைவிழந்த நிலையில் குழந்தையை மருத்துவர் பெரும்பாலும் குணமாக்கி விடுவார். தக்க சமையத்தில் சென்றால் இது சாத்தியமாகும். இல்லையேல் சற்று சிரமம் தான். அதன்பின் பெற்றோர்கள் மிகக் கவனமாகச் செயற்படவேண்டும். மீண்டும் குழந்தையை நினைவிழந்த நிலைக்கு கொண்டு செல்லக்கூடாது. மருத்துவர் பரிந்துரைசெய்யும் இன்சுலின் ஊசியைத் தொடர்ந்து போட்டுவரவேண்டும். குறைந்தது இருமுறையாவது ஊசி போட்டால் தான் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

இன்சுலின் ஊசியின் அவசியம்

சிறுவர்களுக்கு ஏன் ஊசியைத் தொடர்ந்து போடவேண்டுமெனில் அவர்களுக்கு இன்சுலின் சுரக்கும் பீட்டாசெல்கள் முற்றிலும் அல்லது பெருமளவு செயலிழந்து விடுகின்றன. ஆகவே உடலில் இவர்களுக்கு இன்சுலின் உற்பத்தியே இருக்காது. அல்லது போதுமானதாக இருக்காது. எனவே, இவர்கள இன்சுலின் ஊசியைத்தான் நம்பி வாழவேண்டி உளளது. ஊசியைத் தொடர்ந்து மருத்துவர் அறிவுரைப்படி போட்டு வந்தால் மற்றக் குழந்தைகளைப் போலவே இவர்களும் இச் சமுதாயத்தில் நன்கு வாழலாம்.

உணவு முறை

உணவில் சில கட்டுப்பாடுகள் அவசியம் தேவைப்படுகிறது. இதைப் பெற்றோர்கள் மருத்துவரின் உணவுப் பருந்துரையாளரின் அறிவுரைப்படி பக்குவமாக குழந்தைக்கு எடுத்துச்சொல்லி அனைத்து இனிப்பு வகைகளையும் சாப்பிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் சிரமமான காரியம்தான். ஏனெனில் வீட்டிலேயும், பள்ளிக் கூடங்களிலும் மற்றக் குழந்தைகளுடன் இருக்கும் போதும் இவர்களை மட்டும் தனிமைப்படுத்துவது சற்றுசிரமம் தான். ஆனால், வேறு வழியில்லை. மற்ற உணவுகளை மருத்துவரின் அறிவுரைப்படி கொடுத்து வரலாம்.

மற்ற நோய்கள் வரும்போது

மற்ற சில நோய்கள் ஏற்பட்டால் உதாரணத்துக்கு வாந்தி, பேதி, சளி, காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் வந்தால் அப்போது இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பார்த்து அதற்குத் தகுந்தாற் போல் மருத்துவரின் அறிவுரைப்படி இன்சுலின் ஊசிபோட்டுக் கொள்ள வேண்டும். மற்ற நோய்க்கும் மருந்துகள் சாப்பிட வேண்டும் இவ்வாறு மற்ற நோய்க்கு சிகிச்சைக்கு செல்லும் போது சர்க்கரை நோய் சிகிச்சை பற்றிய தகவல்களை மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

பரிசோதனை

மாதம் ஒருமுறை சாப்பாட்டிற்கு முன்பு ஒரு இரத்தப் பரிசோதனை, எழுதிக்கொடுத்த அளவு ஊசிபோட்டுக்கொண்டு அரைமணி நேரம் கழித்தவுடன் சாப்பிட்டுவிட்டு இரு மணி நேரம் பொறுத்து மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

தாழ்சர்க்கரை நிலை

அதே நேரத்தில் குழந்தை தாழ் சர்க்கரை நிலைக்குச் சென்று விடக கூடாது சர்க்கரையின் அளவு 60 மி.கி. குறைவானால் அதிக பசி, சில்லென வேர்த்துப் போதல், படபடப்பு, கைகால் நடுக்கம், மயக்கம், தெளிவு இன்மை, உளறல், நினைவிழத்தல், வலிப்பு முதலியன ஏற்படும். நினைவு இழப்பதற்கு முன் ஏதாவது ஓர் இனிப்பான திரவத்தை உடனே கொடுத்துவிட வேண்டும். நினைவிழந்து இருந்தால் உடனே மருத்துவரிடமோ, மருத்துவ மனைக்கோ அழைத்துச் செல்ல வேண்டும். இதற்காகத்தான் அனைத்து நீரிழிவு நோயாளிகளும் தங்களிடத்தில் ஓர் அடையாள அட்டையை வைத்துக் கொள்ள வேண்டும். அதில்முகவரி மற்றும் தொலைபேசி எண், சிகிச்சை பெறும் மருத்துவர் (அ) மருத்துவ மனையின் முகவரி மற்றும் தொலை எண், இன்சுலின் ஊசி அளவு விபரம் முதலியன குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இது திடீரென சிகிச்சை அளிக்கும் மருத்துவருக்கு உபயோகமாக இருக்கும்.

மாற்று சிகிச்சை முறைகள்

நீரிழிவுக்கு உலகம் முழுவதும் இன்சுலின் ஊசிதான் போடப்பட்டு வருகிறது. மற்ற சிகிச்சை முறைகளில் கட்டுப்பாடு அடைவதில்லை. குணமாவதும் இல்லை. ஆனால் பெற்றோர்கள் ஊசிக்குப் பயந்து கொண்டு மாற்று சிகிச்சை முறைக்கு குழந்தைகளைக் கொண்டு செல்கின்றனர். சில நாட்களுக்குள் இக் குழந்தைகள் இச்சிகிச்சை பலனின்றி மயக்க நிலையை அடைந்து, உயிருக்கு ஆபத்தான கட்டத்தில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுகிறார்கள். மாற்று சிகிச்சைக்கு தங்கள் மனம் செல்வதாக இருந்தால் கூட அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும்.மற்றும் சிகிச்சை மருத்துவர்கள் பரிசோதனை தேவையில்லை என தவறாக அறிவுரை கூறுகின்றனர். பரிசோதனையில் சர்க்கரையின் அளவு அதிகம் இருந்தால் அச்சிகிச்சையை நிறுத்தி விட்டு இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

ஆய்வு

சர்க்கரை நோய்க் கட்டுப்பாடு மற்றும் அதன் பின்விளைவுகள் கட்டுப்பாடு என்ற ஒரு பெரிய 10ஆண்டு கால ஆய்வு சமீபத்தில் அமெரிக்காவில் நடந்து முடிந்தது. அதனுடைய முடிவு என்னவெனில் சர்க்கரை நோயை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் அதனால் வரும் தொந்தரவுகள் தவிர்க்கப்படுவதோடு, பின் விளைவுகளான கண்கள் பாதிப்பு, சிறுநீரகம் பாதிப்பு, கால் நரம்புகள் பாதிப்பு முதலியன பெருமளவு தடுக்கப்படுகின்றன, தவிர்க்கப்படுகின்றன. குழந்தைகள் இன்நோய் இருந்தும் ஆரோக்கியமாக வாழமுடிகிறது.□

டாக்டர்
அ.பன்னீர் செல்வம்M.D.

மருத்துவ விளக்கம்

திலீபன் மருத்துவ மனைகள் மூலம்

பதினாறு மாத காலப்பகுதியில் பாம்புக்கடிக்கு 372 பேர் சிகிச்சை

(மருதங்கேணி)

தியாக தீபம் திலீபன் மருத்துவ மனைகளில் கடந்த 16 மாத காலப் பகுதிக்குள் 372பேர் பாம்புக்கடிக்கு சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இவ்வாண்டு ஜூன் மாதம் வரையான காலப்பகுதிகளில் 10 திலீபன் மருத்துவ மனைகளில் நயினாமடுவில்-64பேர் கற்சிலை மடுவில் 61பேர், ஆழிய வலையில்-60பேர், அலம்பிலில்-46பேர், பூநகரியில் 42பேர், கறுக்காய்க்குளத்தில் 34பேர், ஐயன் குளத்தில் 26பேர், மாங்குளத்தில் 24பேர், நெடுந்தீவில்- 9பேர், புளியங குளத்தில் 6பேர் என்ற அடிப்படையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பாம்புக்கடிக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றவர்களில் பெருமளவிலானோர் இராணுவ ஆக்கிமிப்புக்குப் பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியவர்கள் எனத தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளில் புனரமைப்புச் செய்யப்படாமல் பற்றைகள் வளர்ந்திருப்பதும் இடிபாடுகள் அகற்றப்படாமல் இருப்பதும் பாம்புகள் குடிகொள் வதற்கு வசதியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-35)

ஓம்

தினசரி தியானம்

யோக சக்தி

எல்லா வகையான நோய்கள் துன்பங்கள், மற்றும் நெருக்கடிகளையும் யோக சக்தி அழிக்கக்கூடியது. பிறப்பு மற்றும் இறப்புக்களைக் கொண்ட சம்சாரச் சக்கரத்தில் உழல்வதிலிருந்து உங்களை விடுவிக்கின்றது. ஞானத்தின் வழியாகப் பல்வேறு சித்திகளையும் முத்திகளையும் தருகின்றது. ஆகவே அழியாமையாகிய அமிர்தத்தை அருந்தி யோகியாகுங்கள். இறைவனோடு ஐக்கியமாவதுதான் வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும் ஆகும். அதுதான் மிகச்சிறந்த நன்மையாகும்.

சுவாமி சிவானந்தர்

சிறுவர் நாடக அரங்க விழாவில் தரமான 5நாடகங்கள் ஆற்றுகை

(வட்டுக்கோட்டை)

வடக்கு-கிழக்கு மாகாண ஆரம்பக் கல்வித் திணைக்களத்தால் சிறுவர் நாடக அரங்க விழாவானது கடந்த சனியன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வலய ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட 5வலயங்களினதும் சிறவர் நாடகங்கள் அங்கு அரங்கேற்றப்பட்டதுடன், அதற்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

வலய முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு:

* யாழ்.வலயம்-இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
* வடமராட்சி வலயம்-வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி.
* தீவக வலயம்-எழுவைதீவு றோமன கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.
* வலிகாமம் வலயம்-வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
* தென்மராட்சி வலயம்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி. (உ-89)

கல்வி அமைச்சின் முயற்சியால்

இந்திய பல்கலைக்கழகங்களில் பயில அதிக இலங்கையர்க்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை மாணவர்களில் பலரிற்கு இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வாய்ப்பு கிடைக்க விருப்பதாக கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அண்மையில், இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு இந்திய கல்வி அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பல மாணவர்களுக்கு இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளமை குறித்து இந்தியப் பல்கலைக்கழகங்களின் அதிகாரிகளுக்கு இந்தியக் கல்விஅமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

அத்துடன் இந்தியப் பல்கலைக் கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு ஒதுக்கக் கூடிய இடங்கள் குறித்து அறிவுறுத்தும் செயற்றிட்டம் ஒன்றும் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில்நுட்ப நிலையம் ஒன்றையும் இலங்கையில் நிறுவுவதற்கு இந்திய கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று கருணா சேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (உ-61,10)

கைக்குழந்தையுடன் சென்ற குடும்பப் பெண்ணுடன் தகாத சேஷ்டை புரிய சிப்பாய் முயற்சி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் குடும்பப் பெண்ணுடன் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிரஸ்தாபப் பெண் மந்திகை மருத்துவமனைக்கு தனது கைக் குழந்தையைக் கொண்டு சென்று விட்டு திரும்பும் வழியில் மணற்காடு சவுக்கம காட்டுப் பகுதியில் வைத்தே படையினர் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பிரஸ்தாபப் பெண்ணின் கைக் குழந்தையை படையினர் பறிக்க எத்தனித்ததுடன் அவ்வரை சவுக்கங் காட்டுக்குள் செல்லும்படியும் வற்புறுத்திக் கொண்டிருந்தனர்.

அந் நேரத்தில் தனது மனைவியை சைக்கிளில் ஏற்றிச் செல்வதற்காக அங்கு வந்த அப் பெண்ணின் கணவர் நிலைமையைப் புரிந்து கொண்டு இரண்டு சிப்பாய்களையும் கடுமையாகத் தாக்கினார்.

இதனால் சிப்பாய் இருவரும் அவ்விடத்தை விட்டுத் தப்பியோடினர். மேற்படி சம்பவம் குறித்து பிரஸ்தாப நபர் அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித் இராணுவப் பொறுப்பதிகாரி பிரஸ்தாப சிப்பாய்கள் இருவரும் தனது பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும் இவ் விடயம் குறித்த எவரிடமும் முறையிட வேண்டாம் என்றும் கூறியதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை மாவன் புக்கப் பிலோப் பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமையிரவு தனது வீட்டு வாசலில் இருந்த குடும்பப் பெண்ஒருவரை சிவிலுடையில் வந்த இரண்டு கடற்படையினர் தூக்கிச் செல்ல முற்பட்டனர்.

இதனால் பிரஸ்தாபப் பெண் கூக்குரலிட அயலவர்கள் அங்கு கூடியதால் அப்பெண்ணைத் தாக்கி விட்டு கடற்படைச் சிப்பாய் இருவரும் தப்பியோடியுள்ளமை தெரிந்ததே.

(த-43)

விசேட அதிரடிப்படை-புலிகள் அம்பாறையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் நாளை புதன்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு அக்கரைப்பற்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்கும் காரணிகள் மற்றும் வடக்குக் கிழக்குப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளதாக விசேட அதிரடிப்படை அதிகாரி நிமால்லுகே தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப்பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக விரைவில் அப்பகுதிக்குச் செல்லவுள்ளதாகவும் அவர் கூறினார்.

(தி.61)

யுனைஸ்கோவின் உறுப்பு நாடாக இலங்கை

(கொழும்பு)

யுனைஸ்கோ அமைப்பின் நிறைவேற்று சபையின் உறுப்பு நாடாக கடந்த 10-ம் திகதியன்று இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது.மொத்தம் 190 வாக்குகளில் இலங்கை 140 வாக்குகளைப் பெற்று நிறைவேற்றுச் சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ அமைப்பின் 58 வருட வரலாற்றில் இலங்கை இவ்வாறு தெரிவு செய்யப்படுவது 3-வது தடவையாகும். அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அதிகூடிய வாக்குகளைப் பெற்று இலங்கையின் சார்ப்பில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கு பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இத் தேர்தலில் 140 அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுத் தெரிவு செய்யப் படும் முதலாவது இலங்கையர் இவர்ஆவர்.

(த-6)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவின் கௌரவ செயலாளர் **திரு.இரா.இரத்தினசிங்கம்** அவர்களின் அன்பு மாமனார் வைத்தியகலாநிதி

கனகரத்தினம் பரமானந்தம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கை ஆக்குகின்றோம் .

சைவசமய விவகாரக்குழு
யாழ்.மாநகரசபை

ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பு

சிவசுப்பிரமணியம் புவராஜா
(புவா/நாசன்/நாஜ்)

எமது அன்பு மகனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் 15.10.2003 புதன்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இவ் அழைப்பை நேர்முக அழைப்பாக ஏற்று மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள், இறுதிக்கிரியையில் கலந்து அஞ்சலி செலுத்தியோர் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
(பெற்றோர்)
ஆ.சிவசுப்பிரமணியம்
(யோகநாதன்)
திருமதி சி.பரமேஸ்வரி
(ஈசுவரி)

35/01 A, நாலாம் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு
(7671)

ஜனாதிபதி...

கப்பட்ட சமாதான முயற்சிகளையே தற்போது விரிவாக முன்னெடுத்துச் செல்கின்றோம்.

முதல் தடவையாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை சமர்பிக்கவுள்ளனர். இது இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்று கூறினார். (தி.1)

பொலிஸ்மா...

வர்த்தகர் ஒருவர் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடத்திய விருந்து பசாரத்தில் பொலிஸ்மா அதிபர் கலந்து கொண்டார் என்ற சர்ச்சையை அடுத்து பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து அவர் விலக வேண்டுமென்று சிஹல உறுமயக் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது.

பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்து தற்போது சிஹல உறுமயவில் இணைந்திருக்கும் கொட்டகதெனிய, ஆனந்தராஜாவுக்கு வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பதவியைத் தனக்கு வழங்குமாறு கோரியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

புலிகள்...

அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறிவருவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல, சர்வதேசநாடுகள் நிர்ப்பந்தம் கொடுத்த காரணத்தினாலேயே விடுதலைப் புலிகள் தமது இடைக்கால நிர்வாக சபை குறித்த இறுதித் திட்ட வரைபை அயர்லாந்தில் கூடி முடிபு செய்துள்ளனர்.

இடைக்கால நிர்வாகசபை குறித்த தமது மாற்று யோசனைகளை விடுதலைப் புலிகள் அரசிடம் கையளித்தபின்னர் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் சூழ்நிலையை அரசு ஏற்படுத்தும்.

எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள குழம்பி விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பார்களேயானால் அதனை முறியடிக்க சர்வதேச நாடுகளுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றை அரசு ஏற்படுத்த வேண்டிவரும் என்று பிரதமர் கூறினார். (ம)

இந்திய...

கடந்த ஓகஸ்ட் மாதம் அவரது இலங்கைக்கான விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்திய அரசியலில் ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக அவரது விஜயம் பிற்போடப்பட்டிருந்தமை தெரிந்ததே.(தி-61)

மன்னாரில்...

ரியார் தேவாலயம் ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமாகும் பேரணிகள் மன்னார் பொது விளையாட்டரங்கைச்சென்றடைந்ததும். மாலை 4 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இப்பொங்கு தமிழ் நிகழ்வுக்காக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலருக்கும் அழைப்பு விடுத்துள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பூரண ஆதரவு வழங்குவதுடன் பாதுகாப்பு வழங்கவும் தாம் தயாராகவுள்ளதாக பொலிஸாரும் இராணுவத்தினரும் தெரிவித்துள்ளனர். (ந-5)

ஓட்டோ...

சம்பங்கள் அதிகரித்துள்ள நிலையில், மாம்பழம் சந்தியில் கடந்த 11-ம் திகதி இராணுவ பவள் கவச வாகனமும் ஓட்டோவும் விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோச் சாரதி மற்றும் ஓட்டோவில் பயணித்தவர் ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர். இதையடுத்து, அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடக வியலாளர்கள் மீதும் பொது மக்கள் மீதும் படையினர் தாக்கியது மட்டுமல்லாமல், சம்பவத்தையறிந்து அவ்விடத்திற்கு விரைந்து சென்ற இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் வாகனமும் படையினரால் சேதமாக்கப்பட்டது.

மிகவருத்தத்திற்குரியதான படையினரின் மேற்படி செயல்களுக்கு தமது மனவருத்தத்தைத் தெரிவிக்குமுகமாக இன்று யாழ்.குடாநாடு தழுவிய ஒருநாள் சேவை நிறுத்தத்தை அனைத்து ஓட்டோ சாரதிகளும் மேற்கொள்ளவுள்ளதாக வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கத்தின் தலைமையகம் அறிவித்துள்ளது.(உ-18)

மாம்பழம் சந்தி இராணுவ வாகனவிபத்து
பொலிஸார் கைது செய்த எட்டுப்பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்திக் கருகில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இராணுவ வாகன விபத்தைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட களேபரம் தொடர்பாகப் பொலிஸாரால் கைது கைதுசெய்யப்பட்டுத் தீடுத்துவைக்கப்பட்டிருந்த பத்துப்பேரில் எட்டுப்பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டுப்பேரும் நேற்று யாழ்.நீதிமன்றில் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதன் போது எட்டுப்பேரையும் விடுதலைசெய்யுமாறு உத்தரவிட்ட நீதிவான் வாரத்தில் திங்கள்,புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களிலும் யாழ்.பொலிஸ்நிலையத்தில் கையொப்பமிடுமாறும் பணித்தார்.

இதேவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஏனைய இருவரும் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் இருவரையும் நாளை புதன் கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதுடன் மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த)

அம்பாறையில் மனித மண்டை ஓடுகள் மீட்பு

(மடடக்களப்பு)

அம்பாறை திராக்கேணி பகுதியில் நான்கு மனித மண்டை ஓடுகள், மனித எச்சங்கள் மற்றும் ஆடைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

2ம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை திராக்கேணி பிள்ளையார் ஆலயத்தை சூழவுள்ள புதர்களைத் துப்புரவு செய்தபோது சில மனித எச்சங்கள் காணப்பட்டுள்ளன.

அதனையடுத்து அகழ்வுப் பணி மேற்கொண்டபோது நான்கு மண்டை ஓடுகளும் மனித எச்சங்கள் சிலவும், ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைக்குண்டுகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா அரசினர் பொது வைத்திய சாலையிலிருந்து நான்கு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன

மீட்கப்பட்ட கைக்குண்டுகள் புதிய ரகத்தைச் சேர்ந்தவையாக இருப்பதால் அவை பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கைக்குண்டுகள் கைபற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

(த-5)

குரங்குபாஞ்சானை...

கோரிக்கை விடுத்திருந்தது.

பேரணியைக் கைவிடுமாறு கோரிக்கை

இந் நிலையில் இப் பேரணியால ஏற்படப்போகும் பாரிய விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டு ஆர்ப்பாட்டப் பேரணியை கைவிடுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு சிஹல உறுமயக் கட்சியிடம் கோரிக்கை விட்டிருந்தது.

இக் கோரிக்கையை நிராகரித்த அக்கட்சி ஆயுதம் எதுவும் இன்றி நிராயுதபாணிகளாக கட்சி உறுப்பினர்களுடனும். பௌத்த பிக்குகளுடனும் முகாமை நோக்கிச் செல்லவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளது.

குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுமாறு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தங்களைக் கொடுப்பதே எமது ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் என்று சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

அமைதி காக்குமாறு வேண்டுகோள்

இதேவேளை சிஹல உறுமயவின் ஏற்பாட்டில் இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணியால் ஏற்படக் கூடிய விளைவுகள் சமாதான முயற்சிகளைப் பாதிக்குமெனவும், எனவே எத்தகைய வன் செயல்களிலும், எவரும் இறங்காது அமைதிகாக்குமாறும் பாதுகாப்பு அமைச்சின செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை ஆர்ப்பாட்டப் பேரணி 'சுரங்கல்' இராணுவ முகாமிற்கு அப்பால் செல்ல அனுமதி வழங்கக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (ம)

உடுப்பிட்டி பகுதியில் வயோதிபருக்கு வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பகுதியில் வயோதிபர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த ச.சிவஞானம் (வயது 73) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, வாள்வெட்டுக்கு இலக்கான பிரஸ்தாப வயோதிபரை இராணுவத்தினரின் பாதுகாப்புடன் சென்ற நபர் ஒருவரே வாளால் வெட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது அச்சுறுத்தல் காரணமாக உடுப்பிட்டி சனசமூக நிலையம் இரண்டு வாரங்களாக திறக்கப்படாத நிலையில் இருப்பதாகவும் பிரஸ்தாப நபருக்கு 24 மணி நேர இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதால் அயலில் வாழும் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் நேற்று யாழ்.மனித வுரிமைகள் ஆணைக்குழுவிலும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த.)

படகு கவிழ்ந்து இருவர் பலி

(கொழும்பு)

அனுராதபுரம் பிரலோகம குளத்தில் படகு கவிழ்ந்ததால் அதில் பயணம் செய்த 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மீன் பிடிப்படகு ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இறந்தவர்கள் இருவரினதும் சடலங்கள் இதுவரை மீட்கப் படவில்லை. கடற்படைச் சுழியோடிகளின் துணையுடன் சடலங்களை மீட்கும்பணி தொடர்ந்துவருவதாக எப்பாவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்

(தி.61)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.